# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 24 செவ்வாய்க்கிழமை (07-03-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:87


### மகளிர் தினமான நாளை

## காணாமற்போனோரின் உறவினர் செயலகம் முன்பாக மறியல் போர்!

யாழ்ப்பாணம், மார்ச்7

கைதுசெய்யப்பட்டு காணா மற்போனோரின் பாதுகாவலர் சங்க உறுப்பினர்கள் நாளை புதன்கிழமை யாழ்.செயலகம் முன்பாக மறியற் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டு சுமார் மூன்றரை ஆண்டுகள் கடந்த நிலையிலும் கதி தெரியாமல் இருக்கும் காணாமற்போன தமது பிள்ளைகளின் நிலை குறித்து உண்மைகளை வெளியிடுமாறு அரசாங்கத்தைக் கோருவதற்காக இந்த மறியற் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் தெரிவித்துள்ளது. இந்தப் போராட்

(12ஆம் பக்கம் பார்க்க)

### செம்மணி விவகாரம்

## கைது செய்வதற்கான உத்தரவில் நீதிவான் நேற்றே ஒப்பமிட்டார்

மன்னார், மார்ச்7

செம்மணி புதைகுழி விவகாரம் தொடர்பாக பெயர்கள் பிரஸ் தாபிக்கப்பட்டுள்ள ஏழு படையினரையும் கைது செய்வதற்கு யாழ்.நீதிமன்றம் விடுத்துள்ள உத்தரவை யாழ்.நீதிமன்ற மேலதிக நீதிவான் எம்.இளஞ்செழியன் நேற்று குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு மன்னாரிலிருந்து பக்ஸ் மூலம் அனுப்பி வைத்தார்.

கடந்த 22ஆம் திகதி செம்மணி புதைகுழி தொடர்பான அமர்வு நீதிமன்றம் யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் கூடிய சமயம், மாலை 6மணியளவில் மேற்படி கைது தொடர்பான உத்தரவை யாழ்.மேலதிக நீதிவான்எம்.இளஞ்செழியன் விடுத்திருந்

(12ஆம் பக்கம் பார்க்க)

# யுத்த நிறுத்தம், இயல்பு நிலை

# அதன் பின்னரே பேச்சுக்கள்

## ஐ.தே.க. இதனையே வலியுறுத்தும் ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது

கொழும்பு,மார்ச் 7

**முதலில் யுத்தத்தை நிறுத்தி, இயல்புநிலையை ஏற்படுத்த வேண்டும். அதன் பின்னரே இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்கள் ஆரம்பமாக வேண்டும்.**

**- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நாளை மறுதினம் சந்தித்துப் பேசும்போது வலியுறுத்துவது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடம் முடிவு செய்திருக்கிறது.**

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த அழைப்பை ஏற்று, எதிர்வரும் வியாழக்கிழமை அலரிமாளிகையில் அவரைச் சந்திப்பது என்று ஐ.தே.கட்சி முடிவு செய்திருப்பது தெரிந்ததே.

ஜனாதிபதியைச் சந்திக்கும் தூதுக்குழுவில் ஐ.தே.கட்சி தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வடமாகாண புனரமைப்பு தனியான அமைச்சின் கீழ்?

### அதன் அமைச்சராக அமுனுகம

கொழும்பு,மார்ச்7

ஜனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கும் வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை கலைக்கப்பட்டு அந்த விவகாரத்துக்கு ஒரு தனி அமைச்சு ஒதுக்கப்படும். அந்த அமைச்சோடு ஜனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இருக்கும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அலுவலகம், திரைப்படக் கூட்டுத்தாபனம ஆகியவை சேர்ந்து அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சராக கலாநிதி சரத் அமுனுகம நியமிக்கப்படுவார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

### நகரசபை மைதான குண்டுவெடிப்பு:

## சித்திரவதை காரணமாகவே சாட்சியமளிக்க முன்வந்தேன்

### கைதானவர் நீதிமன்றில் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 7

என்னைக் கைதுசெய்த இராணுவத்தினரும் பொலீஸாரும் எனது கண்களைக்கட்டிப் பலமாகத் தாக்கினர். வலி தாங்க முடியாமலேயே சாட்சியம் அளிக்க முன்வந்தேன்.

கொழும்பு நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப் புச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட முகமட் அப்துல் கயூம் என்பவர் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் நேற்று இவ்வாறு தெரிவித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வவுணதீவு படைத்தளங்கள் மீது புலிகள் நேற்று கடும் ஷெல் வீச்சு!

### பதிலுக்குப் படையினரும் திருப்பித் தாக்கினர்

மட்டக்களப்பு,மார்ச்7

மட்டக்களப்பு நகருக்கு மேற்கே நான்கு கிலோமீற்றர் தொலைவில் உள்ள வவுணதீவு இராணுவ முகாம் மற்றும் விமானப் படைத்தளம் ஆகியவற்றின் மீது நேற்றுக் காலை 6.15 மணியளவில் விடுதலைப் புலிகள் கடும் ஷெல்தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்த ஷெல்கள் வவுணதீவு இராணுவ முகாமுக்கு அருகிலும், விமானப் படைத்தளத்தின் ஓடுபாதைக்கு அருகிலும் விழுந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஷெல்கள் விழத் தொடங்கியதும் அபாயமணி ஒலிக்கப்பட்டுப் பாதுகாப்புப் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டனர்.

முகாமில் இருந்து வெளியேறி வவுணதீவுப் பிரதேச செயலகம் வரை படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவாறு சென்றனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு., அம்பாறையில் கடும் மழை பொழிவு

### வயல்களில் அறுவடை பாதிப்பு

மட்டக்களப்பு,மார்ச்7

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கடந்த இரு தினங்களாக கடும்மழை பெய்து வருகிறது. மட்டக்களப்புப் பிரதேசத்தில் நேற்றுத் திங்கள் காலை 9மணியுடன் முடிவடைந்த 24மணி நேரத்தில் 41.1 மில்லி மீற்றர் மழை பெய்திருப்பதாக காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இக்காலநிலை தொடர்ந்துமேலும்

(12ஆம் பக்கம் பார்க்க)

### சாரதாம்பாள் படுகொலை விவகாரம்

## முறையான விசாரணை நடக்கவில்லை தொல்லை தவிர்ப்புக் குழுவில் அதிருப்தி

கொழும்பு,மார்ச் 7

புங்குடுதீவில் அந்தணப் பெண் சாரதாம்பாள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக முறையான விசாரணை - உரிய முறையில் - நடத்தப்படவில்லை என்று கொழும்பில் நேற்றுக்கூடிய தொல்லை தவிர்ப்புக்குழுக் கூட்டத்தில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது.

தொல்லை தவிர்ப்புக்குழு அமைச்சர் பற்றி வீரக்கோன் தலைமையில் நேற்று கொழும்பில் கூடியது.

இக்கூட்டத்துக்குகுழு உறுப்பினர்களான தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் ஆர்.சம்பந்தன், இ.தொ.கா. நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜன் ஆகியோரும் சமுகமளித்தனர்.

குற்றப்புலனாய்வுப் பிரிவின் சார்பில் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் எஸ்.அலிஸ் பிரசன்னமாகியிருந்தார். சாரதாம்பாள் கொலை தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்படி தொல்லை தவிர்ப்புக் குழுவைக் கோரியவர்கள் சார்பில் யாழ். மாநகரசபை பிரதிமேயர் என்.ரவிராஜ். மாநகர சபை உறுப்பினர்களான த. முகுந்தன், ச.அரவிந்தன் ஆகியோர் பிரசன்னமானார்கள்.

"கொலைச் சம்பவம் நடந்து இரண்டரை மாதங்களாகியும் சூத்திரதாரிகள் கைது செய்யப்படவில்லை;

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தவருக்கு ஆதரவாக குரல் எழுப்புவது தவறல்ல!

### வை.கோபாலசாமி தெரிவிப்பு

லண்டன்,மார்ச்7

'ஈழத்தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பதில எந்தத்தவறும் இல்லை'

இவ்வாறு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் வை. கோபாலசாமி புதுக்கோட்டையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

ஈழத்தமிழர் போராட்டம் சரியான நெறிமுறையில் தொடர்கிறது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# அதிபர்களுக்கான நேர்முகப் பரீட்சை: கொழும்பு செல்வதற்கு பிரயாண வசதி

கொழும்பில் இம்மாதம் 11ஆம் திகதி நடைபெறவுள்ள அதிபர்களுக்கான நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்வோருக்கு விசேட பிரயாணவசதி செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 9ஆம், 10 ஆம் திகதிகளில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விமானசேவைக்கு ஏற்கனவே பாதுகாப்பு அனுமதிபெற்றவர்கள் இன்று பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் சிவில் அலுவலகத்தில் தமது பயணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே பயண அனுமதி பெற்றுக்கொள்ளாதவர்கள் இன்று காலை தமது பயண அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம் என்று சிவில் அலுவலக அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் பதிவுகளை மேற்கொண்டவர்களும் தமது பயண அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-10)

# சைவ வித்தியா விருத்திச் சங்க பவள விழா 2ஆம் நாள் நிகழ்ச்சி

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்க பவளவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்வாக இந்து போர்ட் இராசரத்தினம் நினைவுக் கருத்தரங்கு எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலியில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் இலங்கையில் கி.பி 1900 - 1960 வரையிலான கல்வி என்ற தலைப்பில் பேராசிரியர் வ.ஆறுமுகம், வரலாற்றுப் பின்னணி என்னும் பொருளில் திருமதி சோமேசசுந்தரி கிருஸ்ணகுமாரும், கல்வி நிறுவன செயற்பாடுகள் என்ற தலைப்பில் 'கலாநிதி நா.தணிகாசலம்பிள்ளையும், யாழ்ப்பாணத்தில் பிறமொழிக் கல்வியின் தாக்கம் என்னும் தலைப்பில் பேராயர் அருட் கலாநிதி எஸ்.ஜெபநேசனும் சைவவித்தியா விருத்திச் சங்கமும் எதிர்காலக் கல்வியும் என்ற தலைப்பில் கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸும் உரையாற்றவுள்ளனர்.

கருத்தரங்கினைத் தொடர்ந்து பெற்றோர் ஒன்றுகூடலும், 'வள்ளி திருமணம்' என்ற இசை நாடகமும் நடைபெறவுள்ளன.

பவளவிழாவின் முதல் நாள் நிகழ்ச்சி விவரம் ஏற்கனவே உதயனில் வெளியானது தெரிந்ததே.


புத்தூர் சந்தியில்!........

## பிறைற்றின் கல்வி நிலையம்

மீசாலை

தரம் - 05 விசேஷ புலமைப்பரிசில் வகுப்புக்கள்

ஆரம்பம் - 08-03-2000 (பிற்பகல் 3.00 மணி)

நுணாவில் ஆசிரியை

திருமதி சோ. சியாமளா

(74235)


## அளவாவோடை - ஏழாலை தென்மேற்கு சுன்னாகம்

விநாயகர் ஆலய கட்டட நிதிக்கான

## சீட்டிழுப்பு முடிவுகள்

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு | – | இல. 2427 |
| இரண்டாம் பரிசு | – | இல. 3169 |
| மூன்றாம் பரிசு | – | இல. 4811 |

ஆறுதல் பரிசில்கள்

4241, 4171, 5378, 7330, 6466
6118, 6823, 7325, 1513, 8036

பரிசில்களை எதிர்வரும் 17.03.2000 திகதிக்கு முன்பு ஆலயத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

(74253) பரிபாலன சபையினர்.

## 31 ஆம் நாள் இதய அஞ்சலி

2000-03-07

எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி மேரி சரோஜா ஜஸ்ரின் ஞானசேகரம்
அவர்களின் கணவர்

### அமரர் ஜஸ்ரின் ஞானசேகரம்

அவர்களின் 31 ஆம் நாள் நினைவுதினமான இன்று அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பதுடன் எமது இதய அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/புனித மரியாள் வித்தியாலயம் (O.L.R)
யாழ்ப்பாணம்.

(74242)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை
திருமதி புஷ்பராணி இரவீந்திரநாதன்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி சின்னம்மா சின்னத்துரை

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை
யாழ்ப்பாணம்.

(74238)

## மெய்வன்மைப் போட்டிகள்

காரைநகர், மார்ச் 7

காரைநகர் வியாவில் சைவ வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 1 மணிக்கு வித்தியாலய அதிபர் ஆ.குமரேசமூர்த்தி தலைமையில் காரைநகர் கருங்காலி முருகமூர்த்தி கோயில் மைதானத்தில் நடைபெறும்.

தீவக வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதமவிருந்தினராகவும் காரைநகர் போருட் திட்ட இணைப்பாளர் வ.கதிரமலை சிறப்பு விருந்தினராகவும் வை.நவசிவாயம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

திருமதி தவமணி விக்னேஸ்வரன் வெற்றியீட்டும் மாணவர்களுக்கு பரிசில்களை வழங்குவார்.

(உ-8-4-73)

* * *

வலி.வடக்கு,மார்ச் 7

பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2மணிக்கு அதிபர் வே.சிவசுந்தரம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட உயிரியல் இரசாயனத்துறை விரிவுரையாளர் கலாநிதி பொ.நவரத்தினமும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய உடற்கல்விப் பணிப்பாளர் வி.பாலசிங்கமும் கௌரவ விருந்தினராக கிராமஅலுவலர் ச.சிவகுமாரனும் கலந்துகொள்வர்.

* * *

பருத்தித்துறை,மார்ச் 7

வடமராட்சி வலய மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் இன்றும் நாளையும் வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி விளையாட்டு மைதானத் தில் நடைபெறும் என வலயக் கல்விப்பணிப்பாளர் சி.சிவராசா அறிவித்துள்ளார்.

(ஐ-118-173)


## பிரத்தியேக வகுப்பு

பொருளியல்

இ. இராஜேஸ்வரன்

வினாவிடை வகுப்பு

பகுதி I
சந்தைப் பொருளாதாரம்
புதன் 6.15 a.m

பகுதி II
சென்மதி நிலுவை
வியாழன் 6.15 a.m

கோயில் வீதி,
நல்லூர்.
(கைலாச பிள்ளையார் கோயில் அருகில்)

(74234)

## லிபேட்டி

அச்சுவேலி

சில தினங்கள் மட்டுமே.
அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்!

இரத்தக் கண்ணீர்

காட்சிகள் – 10.30, 2.30

T.P : 070-212223
070-212678

(74112)

## ராஜா

யாழ்ப்பாணம்

அநேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க
நாளையும் நாளை மறுதினமும்
மூன்று காட்சிகள் காண்பிக்கப்படும்
10.30, 2.00, 5.00

சரத்குமார், தேவயானி நடித்த
சூர்யவம்சம்

09-03-2000 முதல்
படையப்பா

(c/11282)

## நாகம்ஸ்

சுன்னாகம்

அஜித் சிம்ரன் நடித்த
அவள் வருவாளா?

ரீல்ஸ்

காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)

(C/11243)


# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம் பழனித்துரை

(உரிமையாளர் - இந்திரன் ஹாட்வெயர், K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.)

அராலி தெற்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் பழனித்துரை நேற்று (06.03.2000) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் முத்துமாரியின் அன்புக்கணவரும் இந்திரகுமாரன், தர்மகுமாரன் (PHYSICAL EDUCATION 2ஆம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்), நவசித்தி, புஸ்பலதா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கோபி தாசன் (சுவிஸ்) அவர்களின் அன்பு மாமனாரும் கோபிநாத், விடுஸ்நாத் ஆகியோரின் அன்புப் பேரனும் கந்தசாமியின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (07.03.2000) செவ்வாய்க்கிழமை நடைபெற்று பி.ப. 2.00மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
ப.இந்திரகுமாரன்
(மகன்) (74256)

## திருமதி திலகவதி கந்தப்பு

மாரீசன்கூடல், இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி திலகவதி கந்தப்பு நேற்றுமுன்தினம் (05.03.2000) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து - தங்கம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் சுப்பிரமணியம் கந்தப்புவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - நாகமுத்து தம்பதியினரின் அருமை மருமகளும் நாகேஸ்வரி, கதிர்காமநாதன் (வவுனியா) காலஞ்சென்ற பறுவதம், சுப்பிரமணியம் (கனடா), கிட்ணதாஸ் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவலிங்கம் (ஜோய் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்), புஸ்பயோகேந்திரி, வசுமதி, சாரதா ஆகியோரின் மாமியாரும் யாழினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ஜனகன் (யாழ். இந்துக்கல்லூரி) மகிழினி (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி) கலைவாணி, காயத்திரி, தர்மிகா, கஸ்தூரி, ரம்மிகா, ஷினினி, சரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் திருநாவுக்கரசு (கனடா) காலஞ்சென்ற திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் (வவுனியா), சரோஜினி ஆகியோரின் சகோதரியும், முத்துப்பிள்ளை, அமுதாம்பிகை, சிவனேஸ்வரி, புவனேஸ்வரன் (பிரதம லிகிதர், துபாற் கந்தோர், வவுனியா) ஆகியோரின் அருமை மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.03.2000) செவ்வாய்க் கிழமை மு.ப.10.00மணியளவில் மாரீசன்கூடல் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் பாதகன்காடு மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஜோய் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்,
97, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
K.சிவலிங்கம்
(மருமகன்)

(C/11327)

## தியாகராசா அன்பகிலன்

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி கோயில் குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா அன்பகிலன் 04.03.2000 சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் தியாகராசா - ரதில்லாவதி தம்பதிகளின் ஏக புத்திரனும், இரத்தினம் - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.03.2000) செவ்வாய்க்கிழமை கிளின்ரன் சவச்சாலையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 3.00 மணிக்கு நல்லடக்கத்துக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ரதி இல்லம்'
(ஆஸ்பத்திரி முன்பாக)
சாவகச்சேரி.

தகவல்:
சி.சிவானந்தன்

(74258)

## திருமதி வயிரவப்பிள்ளை பாலசௌந்தரம்பிள்ளை

மயிலங்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் கற்பகப்பிள்ளையார் கோயிலடி கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வயிரவப்பிள்ளை பாலசௌந்தரம்பிள்ளை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வயிரவப்பிள்ளையின் அன்பு மனைவியும் திருநாவுக்கரசு (அச்சாத்தம்பி), சிவசுப்பிரமணியம், சந்திராதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற அன்னபூரணம், அன்னம், சந்திர சேகரம் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (07.03.2000) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12.00மணிக்கு குடும்ப மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

கற்பகப் பிள்ளையார் வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்:
க.சந்திரசேகரம் - C.T.B.
(மருமகன்)

(74259)

## செல்வி மார்க்கண்டு காணிக்கைப்பரமேஸ்வரி

(சாந்தி)

யாழ்ப்பாணம் பிறவுண் வீதி, 5ஆம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட செல்வி மார்க்கண்டு காணிக்கைப்பரமேஸ்வரி 2000.03.04 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு - தங்கம்மா தம்பதிகளின் புதல்வியும் கமலநாதன் (இந்தியா), கமலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் குணேஸ்வரி, துரைசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் பார்த்தீபன் (பிரான்ஸ்), தமயந்தி (இந்தியா), தனுஷ்யா, நளாயினி (இந்தியா), கார்த்திக் (இந்தியா), ஜானகி (இந்தியா) ஆகியோரின் அத்தையும் சுபாஜினி, சயந்தன், நிரஞ்சன், சுயந்தன் ஆகியோரின் சித்தியுமாவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை இன்று (07.03.2000) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் நல்லடக்கத்துக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

66/10, 5ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
திருமதி கமலேஸ்வரி துரைசிங்கம்

(74261)

# ஆய்வுகளை மேற்கொள்ள முடியாத திருநெல்வேலி விவசாய நிலையம்

## மத்திய அரசிடமிருந்து போதிய நிதி கிடைப்பதில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 7 மத்திய அரசிடமிருந்து போதிய நிதி ஒதுக்கீடு கிடைக்காத காரணத்தினால் திருநெல்வேலியிலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் விவசாய ஆராய்ச்சிகளை மேற்கொள்வதில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மண் ஆராய்ச்சி செய்து வளம் குறைந்த மண்ணை திருத்தம் செய்வதற்கு வேண்டிய தேவை யாழ் மாவட்டத்தில் அவசியமாக இருக்கின்ற போதும் இத்தகைய ஆராய்ச்சிகளைக் கூட இங்கு மேற்கொள்ள முடியாதுள்ளது.

பூச்சிகளை அடையாளம் காணக்கூடிய நுண்தொலைகாட்டி உட்பட ஆய்வு கூட வசதிகளும் இந்த நிலையத்தில் இல்லை என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது.

கடந்த கால வன்செயல்களினால் சேதமடைந்த நிலையிலிருக்கும் ஆய்வுகூடம் இதுவரையும் திருத்தம் செய்யப்படவில்லை என்று நிலைய வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

நிதி ஒதுக்கீடு கிடைக்காமையினால் ஆராய்ச்சி நிலையத்துக்குரிய 50 வீதமான நிலம் பயன்படுத்தப்படாமலிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தொழிலாளருக்குரிய பல வெற்றிடங்களும் நிரப்பப்படாமலிருப்பதால் ஆராய்ச்சிப் பணிகளை முன்னெடுக்க முடியாதுள்ளதாகவும் இந்தநிலையத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-5-10)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தில் உதவி விலை மதிப்பீட்டாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற

### கந்தையா சிவபாதசிங்கம்

அவர்கள் 02 - 03 - 2000 ஆம் திகதியன்று மரணமடைந்ததையிட்டுக் கவலையுற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆதமா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

யாழ். மாவட்ட விலைமதிப்பீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்கள்.

(74243)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 01 — 04 — 1970

இறப்பு: 10 — 03 — 1997

### அமரர் காசிப்பிள்ளை ஞானசேகரம்

(ஞானம்)

எங்கள் அன்புச் செல்வம், ஞானமே
எம்மை விட்டுப் பிரிந்து
மூன்று ஆண்டு சென்றாலும்
துயர் தாங்காது துடிக்கின்றோம்.
உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை
விட்டு அகலாது ஞானமே!

குடும்பத்தினர்.

கரணவாய் மத்தி,
கரவெட்டி.

(74239)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 17 — 07 — 1978

ஆண்டவன் அடியில்: 27 — 02 — 1998

### செல்வன் சுந்தரேஸ்வரன் சஞ்ஜீவன்

திதி: பிரதமை 07-03-2000

ஜீவனே! உன் மதிவதனம் காண்பதெப்போ?
காடு கானம் சென்று உன் உயிரைப் பறிகொடுத்தாய்
எம் ஜீவனே! எமையெல்லாம் சோகக்கடலில்
மூழ்கவிட்டு எங்கு சென்றாய்?
ஆண்டு இரண்டு போனாலும் உன் துயர் ஆறாது.
உன்னை நாம் காண்பதற்கு ஏழு ஜென்மம்
எடுத்தே சேர வேண்டும்.

உனது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
அம்மா, அப்பா, அண்ணாமார்,
தங்கை, தம்பி.

கரந்தன் றோட்,
நீர்வேலி தெற்கு.
நீர்வேலி.

(74236)

## உடை அமைத்தல் பயிற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 7 இணுவில் இந்துக் கல்லூரியில் முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் உடை அமைத்தல் பயிற்சிநெறி நடைபெறவுள்ளது.

(க)

## விமான அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 7 யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 6 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

**சங்கானை**

(135860ஏ), (135860பி),

**கோப்பாய்**

(124178ஏ), (124200ஏ), (124200பி), (124211ஏ), (134082ஏ), (134082பி), (134086ஏ), (134166ஏ), (134166பி), (134175ஏ), (134175பி), (134175சி), (134176 ஏ), (134176 பி), (134177 ஏ), (134179 ஏ), (135987ஏ), (135987 பி), (135987 சி), (136228 ஏ), (136247 ஏ), (136247 பி), (136247 சி), (136262 ஏ), (136262 பி), (135269 ஏ), (136269 பி), (136402 ஏ), (136402 பி), (136405 ஏ), (136405 பி), (136766 ஏ), (136766 பி), (136766 சி), (136775 ஏ), (136776 ஏ).

**நல்லூர்**

(124381 ஏ), (124381 பி), (128334 ஏ), (132263 ஏ), (132263 பி), (132263 சி), [133083ஏ], [121833ஏ],

**சண்டிலிப்பாய்**

[129292ஏ], [129292பி], [135550ஏ], [135551ஏ], [135860ஏ], [135870ஏ].

**உடுவில்**

[134281ஏ], [136315ஏ], [134421ஏ]. (க)

## விளையாட்டு மைதானத்துக்கு 7 பரப்புக்காணி அன்பளிப்பு

சண்டிலிப்பாய், மார்ச் 7 பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்துக்காக ஏழு பரப்புக் காணி அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

சுமார் இரண்டு லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியுள்ள இந்தக் காணியை பிரான்பற்று கிராமத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பித்துரை குணரத்தினத்தின் குடும்பத்தினர் இலவசமாக வழங்கியுள்ளனர்.

விளையாட்டுப் போட்டிகளையும் விளையாட்டுப் பயிற்சிகளையும் நடத்துவதற்கு வித்தியாலயத்துக்குப் பக்கத்திலுள்ள இக்காணி மிகவும் வசதியாக அமைந்துள்ளதாகவும்; இதுவரை இங்கு விளையாட்டு மைதானம் இல்லாதிருந்த குறைபாடு நீங்கியுள்ளதாகவும் பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-135)

## வாழ்த்துகின்றோம்



★ யா/சாவகச்சேரியின் (தேசிய பாடசாலை) முன்னாள் உப அதிபர்

★ மீசாலை இராமாவில் கந்தசாமி கோவில் பரிபாலன சபைத் தலைவர்

சமூகத் தொண்டன்

### உயர்திரு. ம. அருணாசலம் J.P

(B. Sc.) அவர்கள்

சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதையிட்டு பெருமகிழ்வு அடைவதோடு அவர் தம் சமூகப் பணிகள் மேலும் சிறக்க இறைவனை வேண்டி மனமார வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(சி/11234)

## வாழ்த்துகின்றோம்



- யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை) அதிபர்
- அல்லாரை அறுகம்புலம் மகாகணபதிப் பிள்ளையார் ஆலய பரிபாலனசபைத் தலைவர்
- முன்னாள் தென்மராட்சி அதிபர் சங்கத் தலைவர்
- யாழ். மாவட்ட அதிபர் சங்கத் தலைவர்

### உயர்திரு. க. சந்திரசேகரா (J.P)

(B.A., Dip. in Ed., S.L.P.S. - I)

அவர்கள் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதையிட்டு பெரு மகிழ்வு அடைவதோடு அவர்தம் பணிகள் மேலும் சிறப்புற இறைவனை வேண்டி மனதார வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(சி/11323)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

### கணபதிப்பிள்ளை சிவகெங்கன்(கிளி)

மண்ணில் 19–08–1942 விண்ணில் 06–02–2000

6-2-2000 அன்று கந்தானையில் சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் கணபதிப்பிள்ளை சிவகெங்கன் (கிளி) அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் வெளி நாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் தங்கள் அஞ்சலிகளைத் தெரிவித்தோருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (07—02—2000) கந்தானையில் நடைபெறும்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
**தந்தை, மனைவி, சகோதரர்கள், மைத்துனர்கள்.**

15, கல்யே மாவத்த,
கந்தானை.

தகவல்:
திரு. ஸ்ரீகரன்
நந்தாவில், கொக்குவில்.

(74059)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### உயர்திரு. பண்டிதர் குகவைரவனார்

(இளைப்பாறிய ஆசிரியர், பரு. மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, புற்றளை சனசமூக நிலைய முன்னாள் ஸ்தாபகரும், புற்றளை சித்திவிநாயகர் ஆலய நிர்வாகசபைத் தலைவரும்)

மண்ணுலகு: 25-12-1923 விண்ணுலகு: 27-02-1998

திதி: பூர்வபக்க துதியை 07-03-2000

மானுடத்தின் மாய(யை) நடம் பார்த்த விழிமூடி
ஆண்டிரண்டு சென்றதய்யா அகலவில்லை திருக்கோலம்
ஆத்மீகம் வாழ்கவென ஆவி பறிகொடுத்தீர் என்றும்
சாத்வீகம் வாழவென்று எம்வாழ்வை அர்ப்பணிப்போம்.

எங்கள் குடும்பத்தின் அன்புத் தெய்வம் எம்மை விட்டுப் பிரிந்து இரண்டாண்டுகள் அகன்றுவிட்டன. அறிவாற்றலுடனும் அன்புடனும் எம்மை ஆளாக்கிய ஆசானின் பிரிவால் ஆறாத்துயரம் அடைந்துள்ளோம். அன்னாரின் சிரார்த்த தினம் இன்றாகும். அவரின் ஆத்மா சாந்தியடையப் புற்றளை சித்திவிநாயகப் பெருமானை இறைஞ்சித் துதிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் கலங்கித் தவிக்கும்
**மனைவி, மக்கள்.**

தொல் அகம்,
புற்றளை, புலோலி.

(சி/11312)

# கல்வி அதிகாரங்கள் கிடைத்தால்தான் தமிழர் கல்வியைப் பாதுகாக்க முடியும்

## ஆசிரியர் சங்கப் பிரமுகர் தெரிவிப்பு

திருகோணமலை, மார்ச் 7

இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை மூலம் அரசியல்தீர்வு ஏற்பட்டு கல்வி தொடர்பான அதிகாரங்கள் யாவும் வடக்கு—கிழக்கு மாகாணத்தின் கீழ் ஒப்படைக்கப்படுவதன் மூலமே தமிழ் மாணவர்களின் கல்வியைப் பாதுகாக்க முடியும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

திருகோணமலை றோட்டரிக் கழகத்தின் வாராந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது தமிழ் மாணவர்களின் கல்வி எதிர்காலம் பற்றிக் குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்

இலங்கை அரசு நடைமுறைப்படுத்தி வரும் புதிய கல்விச் சீர்திருந்தமானது தமிழ்மொழி மூல மாணவர்களின் கல்வியை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்வதாகவும் தெரிவித்த அவர் தமிழ்மொழிமூல பாடநூல்கள் யாவும் சிங்கள, பௌத்த பண்பாட்டையும் மற்றும் சமூக, பொருளாதார பின்புலத்தையும் மையமாக வைத்து எழுதப்பட்ட பின்னர் அரைகுறைத் தமிழ் தெரிந்தவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கல்விச் சீர்திருத்தமானது தமிழ் மாணவர்களின் கல்வியை அழிப்பது நன்றாகத் தெரிதிருந்தும் அதனை எதிர்க்க முடியாது மௌனமாக இருக்கும் நிலையே உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-10-3)

## உயர்தர வகுப்பு மாணவருக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 7

பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஜி. சீ. ஈ. (உயர் தரம்) மாணவர்களுக்கான முன்னோடி விளக்கம் தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தினால் மறுபதிப்புச் செய்யப்பட்டு இவ்வாரம் அனைத்துப் பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்படும் என்று தொண்டமானாறு வெளிக்கள நிலையத் தலைவர் தெரிவித்தார்.

இரண்டாயிரமாம் ஆண்டு ஜி. சீ. ஈ. (உயர்தரம்) பரீட்சைக்குத்தோற்றும் அனைத்து உயிரியல், இணைந்த கணிதம் ஆகிய பாட மாணவர்களுக்கு இந்தப் பாட வினாத்தாள்கள் இலவசமாக நிலையத்தால் வழங்கப்படவிருக்கின்றன. (இ-3)

## மகளிர் இல்ல நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ். மகளிர் ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நாளைபுதன்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் இடம்பெற உள்ள இந்த நிகழ்வில் அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மகளிர் நிறுவன அங்கத்தவர்கள் மற்றும் யாழ். மகளிர் ஆய்வு அபிவிருத்திநிலைய அங்கத்தவர்கள் உட்படப் பலர் கலந்துகொள்ள உள்ளதாக யாழ். மகளிர் ஆய்வு அபிவிருத்தி நிறுவன ஆலோசகர் தி. திருலிங்கநாதன் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின்போது வலைப்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய 72 மகளிருக்கான சான்றிதழ்கள் மற்றும் வெற்றிக் கிண்ணங்கள் — மற்றும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் பயிற்சி பெற்ற 120 மகளிருக்குச் சான்றிதழ்கள் என்பன வழங்கப்படவுள்ளன. (ஐ-9-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற உள்ளன.

அன்றைய தினம் 'இன்றைய நிலையில் குடும்பத்தில் அமைதி சமாதானம் இன்மைக்குப் பெரிதும் காரணம் ஆண்களா? பெண்களா?' என்ற பொருளில் பட்டிமன்றமும் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற உள்ளன. (ஐ-9-139)

# கட்டடப் பொருள்கள் கப்பலில் வருகின்றன


யாழ்ப்பாணம், மார்ச் 7

கொழும்பிலிருந்து அடுத்த வாரம் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படவிருக்கும் 'இந்துருவலி' கப்பலில் யாழ். கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனத்துக்குரிய பொருள்கள் எடுத்துவரப்படவுள்ளன.

20 ஆயிரம் அஸ்பெஸ்டஸ் சீற்றுகள், 20 ஆயிரம் பைக்கெற் சிமெந்து, 25 ஆயிரம் ஓடுகள், ஸ்ரீல் கோர்ப்பரேஷன் கம்பிகள், பெயின்ற் வகைகள் எனப் பல பொருள்கள் எடுத்து வரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5-9)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



அமரர்

### செல்லையா கணபதிப்பிள்ளைப் பத்தர்

தோற்றம் 1925- 08- 24 மறைவு 2000- 02- 06

கண்ணிமை போல் காத்து வளர்த்த நீர்
கணப்பொழுதிற் பிரிந்ததேனோ?
சோகக் கடலிற் சிக்கித் தவிக்கின்ற
எங்களுக்கு வழி காட்ட எவருமில்லை இனி
அவனியிலே!

எங்கள் அன்புத் தெய்வத்தின் 31 ஆம் நாள் சபிண்டீகரணக் கிரியைகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (07-03-2000) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்,

பிரிவுத்துயர் தாளாத
**திருமதி மகாலட்சுமி** (மனைவி)
**விஜயலட்சுமி** (கேமா-மகள்)
**கடம்பேஸ்வரி** (கடம்பு – மகள்) (வன்னி, மல்லாவி)
**சறோஜினிதேவி** (சறோ) (பிரான்ஸ்)
**கிருபாகரன்** (தாசன்-மகன்)

இல, 13, அரசடி ஒழுங்கை,
தட்டாதெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(சி/11320)

**தெற்காசிய விஜயத்தின் போது**

# கிளின்ரன் சில மணி நேரம் பாகிஸ்தானில் தங்குவார்



வாஷிங்ரன், மார்ச் 7

எதிர்வரும் 20 ஆம் திகதி தனது தெற்காசிய விஜயத்தை ஆரம்பிக்க உள்ள அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் தான்பயணம்செய்யும்வழியில் சில மணி நேரம் பாகிஸ்தானிலும் தங்கிச் செல்வார் என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் போது கிளின்ரன் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பெர்வேஸ் முஷாரப்பையும் சந்தித்து பேச்சு நடத்துவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சாம் பெல் பேஹர் தலைமையில் நடைபெற்ற தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அரச வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சிகள் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளன.

கிளின்ரன் பாகிஸ்தானில் தங்கிப் புறப்பட்டுச் செல்வதற்கான பாதுகாப்பு நிலைகளை ஆராய்வதற்காக முன்னரே ஒரு குழு அனுப்பப்பட்டு விட்டது என்றும் அந்தச் செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

இந்தத் தீர்மானம் பற்றிய அதிகாரபூர்வமான அறிவிப்பு இன்னும் ஓரிரு தினங்களில் வெள்ளை மாளிகையில் இருந்து வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

தெற்காசிய விஜயத்தின் போது கிளின்ரன் பாகிஸ்தான் செல்வாரா என்பது குறித்து முடிவு செய்யப்படவில்லை என்று அமெரிக்க வெளிவிவகாரத்துறை முன்னர் அறிவித்திருந்தது.

இந்த விஜயத்தின் போது கிளின்ரன் இந்தியாவில் 5நாள்கள் தங்கி இருப்பார். அவர் பங்களாதேஷுக்கும் விஜயம் செய்வார். (இ–6–9)

## வாக்களிப்பு முடிவு

பாங்கொக், மார்ச் 7

தாய்லாந்தில் செனட் சபைக்கான முதல் கட்டத் தேர்தல் வாக்களிப்புகள் நேற்று முன்தினம் நடந்து முடிந்துள்ளன.

இருநூறு செனட் ஆசனங்களுக்காக நடத்தப்பட்ட இந்தத் தேர்தலில் ஆயிரத்து 521 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

இந்தத் தேர்தல் தாய்லாந்தின் மக்கள் சக்திக்கும் பணப்பலம் படைத்த அரசியல்வாதிகளுக்கும் இடையில் நடைபெற்ற தேர்தல் என்று வர்ணிக்கப்படுகிறது.

(இ-6-9)

# ஆயுதப் போட்டியில் பாகிஸ்தான் இறங்காது

## ஜெனரல் முஷாரப் கூறுகிறார்

இஸ்லாமாபாத், மார்ச் 7

இந்தியாவுடன் ஆயுதப் போட்டியில் ஈடுபட பாகிஸ்தான் விரும்பவில்லை என்று பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பெர்வேஸ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் இந்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவுக்கான ஒதுக்கீடு அதிகரித்திருப்பது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் கூறினார்.

ஆயுதப் போட்டியில் நாடு இறங்காத அதேசமயம் தனது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான தேவைகளையும் அது புறக்கணிக்காது என்றும் முஷாரப் சொன்னார்.

இந்தியா தனது பாதுகாப்புச் செலவுகளை 28 சதவீதத்தால் அதிகரித்தமை அந்த நாடு தனது பாதுகாப்பை உச்ச நிலையில் பேணுவதையே நமக்கு உணர்த்துகின்றது. எனவே தான் பாகிஸ்தானும் பாதுகாப்பு திட்டமிடல் விஸ்தரிப்பை மேற்கொள்ளும் நிலைக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டி இருந்தது. எனினும் நாடு ஆயுதப் போட்டியில் ஈடுபடாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-6–9)

## விமானவிபத்தில் பயணிகள் தப்பினர்

நியூயோர்க், மார்ச் 7

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள விமான நிலையத்தில் தரை இறங்கிய விமானம் ஒன்று விபத்துக்குள்ளானது. எனினும் அதில் பயணம் செய்த 142 பயணிகளும் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

விமானம் தரை இறங்கும் போது ஏற்பட்ட கோளாறு காரணமாக விமானம் ஓடுபாதையில் சறுக்கி அங்கு நின்றிருந்த கார் ஒன்றுடன் மோதியது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

(இ-6-9)

**உலக அரங்கில்**

## பதற்றம் அதிகரிக்கும்

புதுடில்லிக்கும் லாகூருக்கும் இடையிலான போக்குவரத்தில் ஈடுபடும் பஸ் மீது சிவசேனைத் தொண்டர்கள் தாக்குதல் நடத்தி இருப்பது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவுகளில் மேலும் பதற்றத்தை அதிகரிக்கும் என்று பாகிஸ்தான் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன. (இ-6-9)

# குறைந்தபட்ச அணு ஆற்றலை இந்தியா தொடர்ந்து பேணும்

## வாஜ்பாய் தெரிவிப்பு

புதுடில்லி, மார்ச் 7

பேரழிவை ஏற்படுத்தும் அணு ஆயுதங்கள் அனைத்தும் அழித்தொழிக்கப்படும் வரை இந்தியா தனது குறைந்தபட்ச அணு ஆற்றலைத் தொடர்ந்து பேணி வரும்.

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கல்கத்தாவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போது அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

குறிப்பிட்ட காலத்துக்குள் உலகில் இருந்து அனைத்து அணு ஆயுதங்களையும் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களையும் விரைவில் அழிக்க முழு உலகமும் முன்வர வேண்டும். அந்த வகையில் குறிப்பிட்ட காலத்துக்குள் இந்தியா அணு ஆயுதக் குறைப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

அதேசமயம் — எவருடைய நிர்ப்பந்தத்துக்கும் அடிபணிந்து அனைத்துலக அணு ஆயுதத் தடை ஒப்பந்தத்தில் (சி.ரி.பி.ரி) கையெழுத்திட இந்தியா ஒரு போதும் உடன்படாது.



மனிதகுல நன்மைக்காகவே அறிவியல் தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்; அழிவுக்கு அல்ல.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(இ–6-9)

# லாலு பிரசாத் யாதவ் கைது செய்யப்பட்டார்

## பீஹாரில் நேற்று முன்தினம் சம்பவம்

புதுடில்லி, மார்ச் 7

இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் தடையை மீறி ஊர்வலம் நடத்தினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் ராஷ்ட்டிரிய ஜனதாதள் தலைவர் லாலு பிரசாத் யாதவ் உட்பட சுமார் 100 பேர் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நடத்து முடிந்த சட்ட மன்றத் தேர்தலில் தனிப் பெரும் கட்சியாக வெற்றி பெற்ற ராஷ்ட்டிரிய ஜனதா தள் கட்சியை அரசமைக்க ஆளுநர் அழைப்பு விடுக்காததை எதிர்த்து இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் பட்னா நகரில் தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்த முயன்ற சமயம் லாலு பிரசாத் யாதவ் கைது செய்யப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

அதேசமயம் — பீஹார் முழுவதும் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஹர்த்தாலின் போது இடம்பெற்ற வன்முறைகளில் இருவர் கொல்லப்பட்டனர். பட்னாவிலும் [illegible] ஆர்ப்பாட்டக்காரர்களை [illegible] பொலீஸார் சுட்டதில் ராஷ்ட்டிரிய ஜனதாதள் தொண்டர்கள் இருவர் உயிரிழந்தனர்.

இந்த வன்முறைகளால் மாநிலம் முழுவதும் ரயில் போக்குவரத்துகள் நேற்றும் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன (இ 6-9)

# நாட்டின் அரசியலில் இருந்து பினோசே ஒதுங்க வேண்டும்

## சிலி வெளிவிவகார அமைச்சர் சொல்கிறார்

சிலியின் முன்னாள் சர்வாதிகாரி ஜெனரல் ஒகஸ்ரோ பினோசே அரசியலில் இருந்து உடனடியாக ஒதுங்க வேண்டும். அல்லது அவரது ஆட்சியில் இடம்பெற்ற இனப் படுகொலைகள் தொடர்பான விசாரணைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும்.

சிலி நாட்டின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

லண்டன் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜெனரல் பினோசே விசாரணைகளை எதிர்நோக்க மறுத்தால் தான் சித்த சுவாதீனமற்ற ஒருவர் என்று அவர் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பிரிட்டனில் 16 மாதங்கள் வீட்டுக் காவலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பினோசே கடந்த வெள்ளியன்று விடுதலை செய்யப்பட்டார். அவர் நாடு திரும்பியதும் சிலி இராணுவ அதிகாரிகளாலும் அவரது ஆதரவாளர்களாலும் அவருக்குப் பெரும் வரவேற்பளிக்கப்பட்டது.

இந்த வரவேற்பு அவமானத்துக்குரிய ஒன்று என்று சிலி வெளிவிவகார அமைச்சர் கூறினார்.

அதேசமயம்—

பினோசேயை விசாரணைக்கு நிறுத்த வேண்டும் என்று கோரி பல இடங்களில் ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன.

சிலி இராணுவ அதிகாரிகள் பலர் பினோசேக்கு வரவேற்பளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டதால் இராணுவத்துக்கும் சிலி அரசுக்கும் இடையில் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது

# தெற்கு லெபனானில் இருந்து ஜூலைக்குள் இஸ்ரேல்படை வாபஸ்

ஜெருசலேம், மார்ச் 7

தெற்கு லெபனானில் இஸ்ரேல் ஆக்கிரமித்து வைத்துள்ள பகுதிகளில் இருந்து இஸ்ரேலியப் படையினர் எதிர்வரும் ஜூலை மாதத்துக்கு முன்னர் வெளியேறி விடுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

படை வெளியேற்றம் தொடர்பாக இஸ்ரேலியப் பிரதமர் எகுட் பராக் சமர்ப்பித்த திட்டத்தை இஸ்ரேலிய அமைச்சரவை ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்படி இன்னும் நான்கு மாதங்களில் தெற்கு லெபனானில் இருந்து இஸ்ரேலியப் படையினர் முற்றாக விலக்கிக் கொள்ளப்பட்டு விடுவர்.

சிரியாவுடன் எந்த ஒப்பந்தமும் செய்யாமலேயே படை விலகல் ஆரம்பிக்கப்படும். இதன் மூலம் தெற்கு லெபனானில் 18 வருட காலமாக ஆக்கிரமித்து வைத்திருந்த பகுதிகளை விட்டு இஸ்ரேல் வெளியேறும்.

அந்தப் பகுதியில் இருந்து வெளியேறும் இஸ்ரேலியப் படையினர் இஸ்ரேலின் வட பகுதியில் உள்ள எல்லைகளில் பணியில் ஈடுபடுத்தப்படுவர் என்று பிரதமர் எகுட் பராக் கூறினார்.

இஸ்ரேல் தனது படைகளை வாபஸ் பெறுவதற்கு லெபனான் பிரதமர் சலீம் ஹாக் வரவேற்புத் தெரிவித்தார். எனினும் நிபந்தனைகள் அற்ற படை விலக்கத்துக்கு வழி செய்யும் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்துக்கு ஏற்ப இஸ்ரேல் படையினர் வெளியேறி இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-6–9)

# பாகிஸ்தானின் உளவுப் பறவை இந்திய அதிகாரிகளிடம் சிக்கியது

பாகிஸ்தானால் உளவு வேலைகளுக்காக அனுப்பப்பட்ட ராஜாளி கழுகு ஒன்றை இந்தியப் படையினர் கைப்பற்றி உள்ளதாக பி.ரி.ஐ. செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த ராஜாளியின் உடலில் நுண்ணிய 'டிரான்ஸ்மீற்றர்களும்' சிறிய 'அன்ரெனா' ஒன்றும் பொருத்தப்பட்டிருந்ததாகப் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இத்தகைய வேவுப் பறவைகளை இந்திய — பாகிஸ்தான் கட்டுப்பாட்டு எல்லைகளில் உள்ள இந்தியப்படை நிலைகளை உளவு பார்ப்பதற்காக பாகிஸ்தான் அனுப்புவது வழக்கம்.

இவ்வாறான பறவை ஒன்று ஏற்கனவே ஜெய்ப்பூரிலும் கைப்பற்றப்பட்டுள்ளது. உளவுப் பணிகளில் ஈடுபடவென பாகிஸ்தான் படையினர் இத்தகைய ராஜாளிகளை விசேடமாகப் பழக்கி வருகின்றனர் என்று பி.ரி.ஐ. செய்தி மேலும் தெரிவித்தது.

(இ–6–9)

## வெளிநாட்டு புலமைப்பரிசில் திட்டங்களில்;

# யாழ். தொழில்நுட்பக் கல்லூரி போதனாசிரியர்கள் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி போதனாசிரியர்கள் கடந்த இருபது வருடங்களாக வெளிநாட்டு புலமைப்பரிசில் திட்டங்களில் சேர்த்துக் கொள்ளப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்.

தென்பகுதியிலுள்ளவர்கள் இத்திட்டத்தின்கீழ் வெளிநாடுகளுக்குச் சென்று பயிற்சிகளைப் பெற்று பயனடைந்து வருகின்றனர்.

இத்தகைய பயிற்சித் திட்டங்களுக்கு யாழ்ப்பாண போதனாசிரியர்கள் புறக்கணிக்கப்படுவதால் அவர்கள் நவீன தொழில்நுட்ப அறிவினைப் பெறமுடியாமலுள்ளதாக மேற்படி கல்லூரிச்சமூகம் கவலை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தொழில்நுட்பக் கல்லூரிக்குப் பொறுப்பான தொழிற்பயிற்சி கிராமிய கைத்தொழில் அமைச்சுக்குப் பலதடவைகள் சுட்டிக்காட்டப்பட்டபோதும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

தொழில் நுட்பக் கல்லூரி போதனாசிரியர்களுக்கு ஒவ்வொரு வருடமும் புலமைப்பரிசில் திட்டம் இருக்கின்றபோதும் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றுவதால் இவர்கள் இந்தத் திட்டத்தில்சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் இந்தியாவிலும் தென்பகுதி போதனாசிரியர்கள் சென்று பயிற்சி பெற்று வருகின்றபோதும் யாழ்ப்பாணத்தவர்களுக்கு இந்தியாவுக்குக் கூட செல்ல முடியாத நிலையேற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5 10)

## பொன்விழா நிகழ்வுகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7

இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற இருந்த ஆனைக்கோட்டை சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையத்தின் பொன்விழா நிகழ்வுகள் தவிர்க்கமுடியாத காரணங்களினால் ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொன்விழா நிகழ்வுகள் நடைபெறுவதற்கான புதிய திகதி குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என்று சனசமூக நிலைய நிர்வாகிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(இ)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில்

வடமராட்சி, மார்ச் 7

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய சுற்றாடலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை நடத்தி வரும் வாராந்த நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நல்லூர் பஜனைக் குழுவினரின் பஜனை இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்கான அறிமுகவுரையை இளைப்பாறிய ஆசிரியர் க. கணபதிப்பிள்ளை நிகழ்த்துவார். (க-173)

## சங்கீத பாட செயலமர்வு

சங்கீத பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு மூன்று நாள்கள் வரணி மகாவித்தியாலயத்தில் இயங்கும் ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது

எதிர்வரும் 13ஆம் 14ஆம் 18ஆம் திகதிகள் இந்தச் செயலமர்வு இடம்பெறும்.

தென்மராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் தரம் 7, தரம் 10, தரம் 12 ஆகிய வகுப்புக்களில் சங்கீத பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கே மேற்படி செயலமர்வு நடத்தப்படவுள்ளது (இ-க-133)

## நூல்கள் இரவல் வழங்கும் சேவை ஆரம்பம்

சண்டிலிப்பாய், மார்ச் 7

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தின் பொது சன நூலகத்தில் நூல்கள் இரவல் வழங்கும் சேவை கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை — மானிப்பாயிலுள்ள வலி. தென்மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தினால் பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சனின் பணிப்புரையின் பேரில் இந்த பொது சன நூலகத்துக்கு அண்மையில் இருநூறு புதிய நூல்கள் வழங்கப்பட்டன.

மாணவர்களுக்கான கல்வி தொடர்பான நூல்களும் இங்கு இடம் பெற்றுள்ளதால் இப்பகுதியிலுள்ள மாணவர்கள் இதனை நன்கு பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (க-135)

## கிரிக்கெட் செய்தியில் தவறு

நேற்றைய உதயனில் ஆறாம் பக்கத்தில் 'விளையாட்டரங்கு' பகுதியில் "19 வயது கிரிக்கெட்; நான்கு ஆட்டங்களில் இரண்டில் மானிப்பாய் இந்து அணி வெற்றி" என்ற தலைப்பில் வெளியான செய்தி தொடர்பாக பின்வரும் தவறுகளை ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(1) தற்போது பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்று வருவது சினேகபூர்வ கிரிக்கெட் ஆட்டங்களே தவிர, கிரிக்கெட் சுற்றுப் போட்டியே அல்ல.

(2) இத்தகைய சினேகபூர்வ ஆட்டங்களில் முற்றாக ஆட்டம் முடிந்து ஓர் அணி (Outright ஆக) வெல்லாத நிலையில் எந்த அணிக்கும் வெற்றி வழங்கப்படுவதில்லை; ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததாகவே கருதப்படும்.

சில விசேட விதிகள், ஏற்பாடுகளுக்கு அமைய நடத்தப்படும் சுற்றுப்போட்டிகளில் மட்டும், ஆட்டம் முற்றாக முடிவடையாமல் விட்டால் முதல் இன்னிங்ஸ் ஓட்ட எண்ணிக்கையின் அடிப்படையில் வெற்றி வழங்கப்படுவதுண்டு.

அத்தகைய விசேட ஏற்பாட்டை பாடசாலைகளின் சினேகபூர்வ ஆட்டங்களிலும் நடைமுறைப்படுத்தி, முடிவை எடுத்து, அறிவிக்கும் அதிகாரம் யாருக்காவது வழங்கப்பட்டுள்ளதா?

(3) உதயனின் சம்பந்தப்பட்ட செய்தி முழுவதும் இத்தகைய விசேட விதியை நடைமுறைப்படுத்தி வரையப்பட்டிருப்பதால் அச்செய்தி முற்றிலும் தவறானது.

— இவ்வாறு ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தவறுக்கு வருந்துகிறோம் (ஆ-ர்)

## விவசாயிகளுக்குக் கடன் உதவி

பிரான்பற்று கிராமத்தில் விவசாயத்தில் ஈடுபட்டுவருபவர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் விவசாய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 96 ஆயிரம் ரூபா கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

பிரான்பற்று கிராம அபிவிருத்திச்சங்கத்திற்கு ஊடாக இது வழங்கப்பட்டது.

இந்தக்கடனுதவி வழங்கும் வைபவம் அண்மையில் பிரான்பற்று கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி. மகேந்திரன் தலைமையில் சங்க மண்டபத்தில்நடைபெற்றது.

சண்டிலிப்பாய் பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க. ஸ்ரீபதி சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு இதற்கான நிதியினை கையளித்தார். (இ 135)

## மகளிர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 7

சாவகச்சேரி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் சர்வதேச மகளிர்தினம் கொண்டாடப்படவுள்ளது.

இந்த நிகழ்வு நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவி திருமதி உருத்திராதேவி சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் திருமதி மங்கையர்க்கரசி சிற்றம்பலம் ஆகியோரும் —

சிறப்பு - விருந்தினர்களாக சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி கிருபா வீரசிங்கம், சாவகச்சேரி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் இ. பரராஜசேகரம், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின்ஓய்வு பெற்ற ஆரம்பப்பிரிவு அதிபர் திருமதி மகேஸ்வரி சிவஞானம் ஆகியோரும் —

கௌரவ விருந்தினர்களாக வைத்திய கலாநிதி சு. சி. அருளானந்தம், கிராம அலுவலர் வை. இராசரத்தினம் ஆகியோரும் கலந்து கொள்வர்

இந்த நிகழ்வில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். (இ-க)

★ ★ ★

காரைநகர், மார்ச் 7

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சமூகக்கல்வி மன்றம் நடத்தும் சர்வதேச மகளிர் தினம் நாளை புதன்கிழமை காலை 9.00 மணிக்கு மன்றத் தலைவர் எஸ். தவநேசன் தலைமையில் கலாசாலை ரதிலக்ஷ்மி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரச சார்பற்றநிறுவனங்களின் ஒன்றிய இணைப்பாளரும் வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளருமானதிருமதி கோகிலா மகேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இந்த நிகழ்வில் கலாசாலை ஆசிரிய மாணவர்களின் கலை நிகழ்வுகளும்இடம் பெறவுள்ளன.. (க-73)

# செய்திக் கொத்து

## கட்டடத் திறப்பு விழா

காரைநகர், மார்ச் 7

காரைநகர் கங்கைமதி சனசமூக நிலைய முன்பள்ளிப் புதிய கட்டடத் திறப்பு விழா நடந்த வியாழக்கிழமை வை. கிருஷ்ண பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

யாழ். 'போரூட்' திட்ட முகாமையாளர் அன்னி அங்ஹல் வெற் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந திரிலோகநாதன், காரை. மத்தி கிராம அலுவலர் கே. சிவலிங்கம் ஆகியோர் இந் நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (க-73)

## சமய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 7

திருநெல்வேலி கிழக்கு வெள்ளைப்பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வாலை அம்மன் சனசமூக நிலையம் சைவ சமய அறிவுப் போட்டியை நடத்தவுள்ளது.

(க-15)

## கோரிக்கை

திருநெல்வேலி, மார்ச் 7

நல்லூர் ஜனசக்தி சனசமூக நிலையம், நிலையப் பகுதியிலுள்ள மக்களுக்கு சுய தொழில் முயற்சிக் கடன் பெறுவதற்கு உதவுமாறு கோரி நல்லூர் பிரதேச செயலருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் மற்றும் உதவி வழங்கும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியனவற்றிடமிருந்து சுயதொழில் முயற்சிக்கான கடனை இப்பகுதி மக்களுக்கு பெற்றுத்தருமாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(க-135)

## அபிவிருத்திச் சபை

வலி.வடக்கு, மார்ச் 7

கோண்டாவில் கிழக்கு கோட்டைக்காடு இந்து மயானத்துக்கு அபிவிருத்திச்சபைஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

(இ-86)

## மீண்டும் விளக்கமறியலில்

நெல்லியடி, மார்ச் 7

வடமராட்சிப் பகுதியில் திருட்டுக்களில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு காசுப்பிணையில் விடுதலையான ஐவரில் மூவர் மீண்டும் திருட்டுக் குற்றச் சாட்டில் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

அல்வாய் வடக்கு முத்துமாரி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த கந்தசாமி றமேஸ்குமார் (வயது 26), முத்துலிங்கம் சதீஸ்குமார் (வயது 20), சுப்பிரமணியம் மதியரசன் (வயது 24) ஆகியோரையே மார்ச் 13ஆம் திகதிவரை, விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

திருமணச்சடங்கு நடைபெறவிருந்த வீடொன்றில் முதல்நாள் இரவு உட்புகுந்து பலகார வகைகளையும் அங்கு நின்ற இரு சைக்கிள்களையும் திருடினார்கள் என்று பருத்தித்துறை பொலீஸாரினால் இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

(க-109)

## வீதிக் கிடங்கில் விழுந்தெழும்பும் பரிதாபம்

குருநகர், மார்ச் 7

யாழ்ப்பாணம் ஆறாம் குறுக்கு வீதி — குருநகர் கடற்கரை வீதியுடன் சேரும் இடத்தில் வீதியின் மத்தியில் வெடிப்புடன் கூடியபள்ளம் காணப்படுகின்றது. இதனால் இந்த வீதியினூடாக இரவு நேரங்களில் பயணம் செய்யும் பலர் இந்தப் பள்ளத்தில் விழுந்தெழவேண்டிய நிலை உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

இவ்வீதியில் உள்ள மேற்கூறிய பள்ளத்தை நிரவிச் செப்பனிடுமாறு குருநகரிலுள்ள பல பொது அமைப்புக்கள் யாழ். மாநகரசபை ஆணையாளருக்குக் கடிதம் அனுப்பியும் இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்பட்டது.

(க-51)

## போட்டோப்பிரதி இயந்திரம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் தென்மராட்சிக் கல்வி வலயத்துக்கென 'போட்டோப்பிரதி' இயந்திரம் ஒன்று அண்மையில் வழங்கப்பட்டது.

இந்த இயந்திரம் வலயத்தின் நிதிப்பிரிவு அலுவலகத்தின் பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஏற்கனவே வழங்கப்பட்ட கணனியானது மின்சாரமின்மை ஆளணிப் பற்றாக்குறை போன்றவற்றால்முழுமையாகச் செயற்பட முடியாமல் உள்ளது.

(இ-10-133)

## வீரசிங்கம் மகாவித்தியாலயம் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 7

பிரதேச செயலக ரீதியாகப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கென அண்மையில் தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் டெக் என்பன வழங்கப்பட்டன. அத்துடன் இம்மாதம் கணனியும் வழங்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(இ-10-133)

## வரவேற்பு விழா

நெல்லியடி, மார்ச் 7

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தின் பதிவாளராகப்பதவி உயர்வு பெற்ற வல்லிபுரம்— மார்க்கண்டுவுக்கு கடந்த திங்கட்கிழமை மாலை மேற்படி நீதிமன்றில் வரவேற்பு விழா நடத்தப்பட்டது.

பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் மாவட்ட நீதிமன்ற பதிவாளர் கே. செல்வரட்ணம், நீதிமன்ற பொதுசன தொடர்பு அதிகாரி எஸ். சந்திரலிங்கம் உட்பட பல சட்டத்தரணிகளும் பாராட்டுரை வழங்கினார்கள். (க-109)

உதயன்

## நிரந்தரமான முடிவாக்குக!

கடந்த வாரம் கொழும்பில் வடக்கு—கிழக்கு மாகாணசபையின் பாதுகாப்புக்குழுக் கூட்டம் நடைபெற்றது. மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனாவின் தலைமையில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் வரவேற்கத்தக்க முடிவு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உலக வங்கியின் உதவியுடன் வடக்கு—கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட உள்ள விவசாய மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்களை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலும் நடைமுறைப் படுத்துவது என்பதே அந்த முடிவாகும்.

வெளிநாட்டு உதவியாகவோ, சர்வதேச நிதி நிறுவனங்களின் உதவியாகவோ கிடைப்பன அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள பகுதிகளுக்கே வழங்கப்பட்டு வந்தன. புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களை அரசாங்கம் வடக்கு—கிழக்கு மாகாணத்திற்குள் அடங்கும் பகுதிகளாகக் கருதியதில்லை!

பெரும் பணச் செலவில் போர் ஒன்றை நடத்தி வரும் இலங்கை அரசாங்கம், நாட்டின் உட்கட்டமைப்புக்கான அபிவிருத்திப் பணிகளைச் செய்வதற்குக்கூட, வெளியாரின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளையே பெரியளவில் நாடி நிற்கிறது; நம்பி இருக்கிறது.

இவ்வாறு கிடைக்கும் உதவிகளில் குறைந்த அளவே வடக்கு — கிழக்குக்கு வந்து சேர்கிறது. போர்ச் சூழ்நிலை, பாதுகாப்புக் காரணம் என்றெல்லாம் கூறி வெளியாரிடம் இருந்து கிடைக்கும் உதவிகளில் சொற்ப அளவே தமிழ்ப்பகுதிகளுக்குச் செலவிடப்படுகிறது. அதிலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வெளிநாட்டு உதவித் திட்டங்களை அரசு நடைமுறைப் படுத்துவதில்லை.

உதாரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ''நோராட்'' நிறுவனம் மேற்கொண்டு வந்த அபிவிருத்தி வேலைகளைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் செய்யக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டது.

அரசின் இந்தப் போக்கு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்கள் அரசாங்கத்தினுடையவை அல்ல; அங்கு வாழும் மக்களும் இலங்கைப் பிரஜைகள் அல்லர் என்ற நிலைப்பாட்டையே தோற்றுவித்தது.

தானாகவே இப்படி ஒரு நிலையை உண்டாக்குவது உகந்ததல்ல என்று அரசு இப்போது நினைத்திருக்க வேண்டும்! இல்லையேல், தனக்குப் பிரதான நிதி உதவியாளராகவும், திட்டமிடலாளராகவும் விளங்கும் உலக வங்கியின் ஆலோசனையின் பேரில், அதனை நிராகரிக்க முடியாத நிர்ப்பந்தத்தினால், புதிய முடிவுக்கு வந்ததா?

உலக வங்கி உதவிக்கு ஓர் அளவுகோல்; ஏனைய வெளியார் உதவிகளுக்கு இன்னொரு அளவுகோல் என்று செயற்படாமல் ஒரே அளவு கோலை அரசு பயன்படுத்த வேண்டும். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப் போவதாக முழக்கமிடும் அரசு—தமிழ்ப்பகுதி அபிவிருத்தியிலும் தனக்கு அக்கறை இருப்பதாகக் காட்டிக் கொள்ளும் அரசு—வெளியார் நிதி உதவிகளைச் செலவிடுவதில் தமிழ்ப் பிரதேசங்களுக்கு இடையிலேயே வேறுபாடு காட்டுவது எந்த வகையிலும் நியாயப்படுத்தக் கூடியது அல்ல.

முந்திய அணுகு முறையை மாற்றி இப்போது எடுத்துள்ள புதிய முடிவை நிரந்தரமான தாக்க வேண்டும்.

# யுத்தக் கைதிகளின் உறவினர்களை திணறடித்த புலிகளின் மனிதநேயம்

சமீபத்தில் புதுக்குடியிருப்பு சென்று உண்ணாவிரதம் இருந்த யுத்தக் கைதிகளைச் சந்தித்த பின்னர் கொழும்பு திரும்பிய உறவினர்கள் தமது அனுபவங்களை 'பெரமுன' என்ற சிங்கள வார இதழுக்குத் தெரிவித்தனர். இதில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டு அவர்களின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த சிறைக்கைதிகளை அவர்களது உறவினர்கள் நேரில் வந்து பார்வையிடலாம் என விடுதலைப் புலிகள் விடுத்த அழைப்பு அண்மையில் பத்திரிகைகளில் முக்கிய செய்தியாக இடம் பெற்றது.

அந்தச் சிறைக் கைதிகளின் உண்ணாவிரதம், பின்னர் கைவிடப்பட்டது மற்றும் அந்தச் சிறைக் கைதிகளில் நால்வர் விடுவிக்கப்பட்டது ஆகிய சம்பவங்கள் தொடர்பான செய்திகள் அடுத்தடுத்து முக்கிய இடங்களைப் பெற்றன.

இருப்பினும் இந்தச் சிறைக் கைதிகளைச் சந்திக்க புதுக்குடியிருப்பு சென்று கொழும்பு திரும்பிய கைதிகளின் தாய் தந்தையர்களை அரசில் உள்ள பொறுப்பானவர்கள் அணுகிய விதம் மிகவும் வேதனையை அளிக்கிறது.

எவ்வாறாயினும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் கோடி புண்ணியம் கிடைக்கும் என வன்னி சென்று திரும்பிய ஒரு தாயார் தெரிவித்தார்.

வன்னி சென்று கொழும்பு திரும்பிய சிறைக் கைதிகளின் பெற்றோர்களுக்கு அன்றைய தினம் ஒரு வேளை உணவளிக்கவோ அல்லது அவர்களுக்குப் போக்குவரத்து வசதிகளை ஒழுங்கு செய்யவோ அரசாங்கத்தில் எவரும் முன்வரவில்லை.

வன்னியில் விடுதலைப்புலிகளாலும் கொழும்பு வரும் வரை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவாலும் நன்கு உபசரிக்கப்பட்ட பெற்றோர்கள் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டு ஜானகி ஹோட்டலில் இறக்கிவிடப்பட்டனர்.

புதன்கிழமை பகலுணவு

## வன்னிப் பயணம் மறக்க முடியாதது என்கின்றனர்!

கூடக் கிடைக்காத அவர்கள் அன்று பகலே தங்களது பயண முடிச்சுக்களுடன் ஹோட்டலில் இருந்து வெளியேறிக் கால் நடையாகப் புறக்கோட்டை பஸ் நிலையம் செல்லத் தயாராகிக் கொண்டிருந்தனர். கொழும்பிலிருந்து புதுக்குடியிருப்புக்குப் புறப்பட்டுமீண்டும் கொழும்பு வந்து சேரும்வரை தங்கள் அனுபவங்களை ஒரே குரலில் எங்களுக்கு அவர்கள் எடுத்துக் கூறினர்.

1994 செப்ரெம்பர் 19 ஆம் திகதி மன்னார்க் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குள்ளான ''சாகரவர்த்தன'' கடற்படைக் கப்பலின் கப்டனாகப் பணிபுரிந்த அஜித் போயகொடவின் மனைவியும் அங்கு இருந்தார். தனது கணவன் அந்தத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டார் என்ற தகவலை 1994 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 11 ஆம் திகதி செஞ்சிலுவைச் சர்வதேசக்

**தமிழில்: கஜனி**

குழுவினர் தெரிவித்தனர் என அவர் கூறினார். அவர் மிகவும் கவலையுடனும் உணர்ச்சியுடனும் எங்களுடன் உரையாடிக்கொண்டிருந்தார்

### வன்னிப் பயணம்

திருமதி போயகொட உட்பட சிறைக் கைதிகளின் உறவினர்கள் கடந்த மாதம் 21 ஆம் திகதி வன்னி செல்வதற்காகக் கொழும்பு வந்திருந்தனர். இவர்களில் குருநாகல், பொலநறுவை, எல்பிட்டி ஆகிய தூர இடங்களைச் சேர்ந்தோரும் அடங்கியிருந்தனர்.

இவர்கள் அனைவரும் உளரீதியாக மிக வேதனையுடனும் பதில் கிடைக்காத வினாக்களுடனும் பரிதாபத்துடன் காணப்பட்டனர்.

பிரயாண ஒழுங்குகள் அனைத்தும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பயணத்தில் பத்திரிகையாளர்களோ அல்லது சிறைக் கைதிகளின் பெற்றோர்களின் சங்க உறுப்பினர்களோ சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

கடந்த மாதம் 21 ஆம் திகதி மாலை 6.00 மணியளவில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தலைமையகத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்த இந்தக் குழுவினர் நள்ளிரவு அனுராதபுரத்தை அடைந்து அங்குள்ள வாடிவீட்டில் இரவைக் கழித்தனர்.

மறுநாள் காலை 8.30 மணியளவில் இராணுவத்தின் பொறுப்பான அதிகாரிகள் இவர்களை மதவாச்சியில் பொறுப்பேற்று வவுனியாவிலுள்ள பிரிகேட்டுக்கு அழைத்துச் சென்றனர். அங்கு காலை உணவை அருந்திய இக் குழுவினர் சுமார் ஒரு மணி நேரத்தின் பின்னர் செஞ்சிலுவை மற்றும் இராணுவ வாகனங்கள் இரண்டில் ஏற்றப்பட்டு வன்னிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கிருந்து சுமார் 5 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருந்த ஓர் இடத்தில் — புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் — இக் குழுவினரை நிராயுதபாணிகளான இரு விடுதலைப்புலி உறுப்பினர்கள் பொறுப்பேற்றனர்.

இந்தக் குழுவினரை அழைத்துச் செல்ல வந்திருந்த வாகனத்தின் சாரதியும் உதவியாளருமே அந்த இரு புலி உறுப்பினர்கள் ஆவர். அந்த வாகனத்தில் ஏறிய குழுவினர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வாகனம் உடன் வரப் புலிகளால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

பெரியகுளம் என்றஇடத்தில் வைத்து இக் குழுவினர் விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவினரால் பொறுப்பேற்கப்பட்டனர். அங்கு அவர்களுக்குப் பகல் உணவு வழங்கப்பட்டது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# வெளிநாட்டுப் பெரியோராலும் மதிக்கப்பட்ட 'கல்லடி வேலர்'

ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை அவர்கள் கவி மட்டுமல்லர்; உன்னத உரைநடைக்கர்த்தா. சமத்காரமும் அஞ்சாமையும் மிக்க பத்திரிகையாளர். இணையற்ற கண்டனக்காரர். சிறந்த சரித்திர ஆய்வாளர். உயர்ந்த சைவத் தொண்டர். அதே ஞான்று பிற மதங்களையும் துவேஷக் கண்கொண்டு பார்க்காத பண்பாளர். தனது காலத்து வித்துவான்களாலேயே 'நிகரற்ற மேதை' எனக் கொண்டாடப்பட்டவர். ஈழத்தில் மட்டுமன்றி இந்தியா, மலாயா போன்ற தேசத்துப் பெரியார்களாலும் வித்தகர் என விதந்தோதப்பட்டவர்.

ஆசுகவி அவர்கள் தனது வாழ்நாள் முழுவதையுமே ஒரு கவியாகவும் பத்திரிகையாளராகவும் கழித்தார். மிகவும் சிரமத்தின் மத்தியிலும் ஓர் அச்சுக்கூடம் நிறுவி 'சுதேச

**இன்று அவரது நினைவு நாள்**

நாட்டியம்' என்ற பத்திரிகையைப் பன்னெடுங்காலம் (1902 ஆம் ஆண்டு முதல் 1944 ஆம் ஆண்டுவரை) அஞ்சாமையோடு நடத்தித் தனது கனல் கக்கும் கண்டனங்களால் எதிரிகளைக் கதிகலங்கச் செய்தும் தனது ரமணியமான வசனநடையால் தமிழ் வசனத் துறைக்குச் சிறப்பான முறையில் தம் பங்களிப்பைச் செலுத்தியும் இன்னமும் பல்லாற்றானும் பாங்கு மிகு பணி புரிந்தார். தனித்துவம் மிக்க நகைச்சுவைக் கவிதைகளையும் ஏராளமாக யாத்தார்.

ஆசுகவியவர்கள் சுமார் இருபது நூல்களைஎழுதியிருக்கின்றார். அந்நூல்களிற் பல அன்னாருடைய நுட்பமான அறிவுத் திறனுக்கு அணியெனச் சுடர்கின்றன.

அவரின் நூல்களில் 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' மிகச் சிறந்தது. யாழ்ப்பாணத்துச் சரித்திரத்தையும் யாழ்ப்பாணத்துக் குடிகளையும் அறிய விழைவார்க்கும் யாழ்ப்பாணத்தின் கண் உள்ள ஊர்களின் பெயர்க் காரணங்களைத் தெரிந்து கொள்ளத் துடிப்பார்க்கும் புலவரின் இந்நூல் ஓர் ஒப்பற்ற துணை நூலாகும். எவர்க்கும் அஞ்சாத துணிச்சலும் கடவுளைத் தவிர யாரையும் கும்பிட்டு வாழாத பேராண்மையும் புலவரின் இரத்தத்தோடு இரத்தமாக ஓடிய ஒப்பற்ற பண்பு.

ஆசுகவியவர்கள் யாழ்ப்பாணத்திலே—வலிகாமம் வடக்குப் பகுதியின் கண் அமைந்திருக்கும் வசாவிளான் என்ற சிற்றூரிலே கந்தப்பிள்ளை—வள்ளியம்மை தம்பதிகளின் மைந்தனாக 1860 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7 ஆம் திகதி பிறந்தார்.

வேலுப்பிள்ளை என்றஇயற்பெயரைக் கொண்ட புலவரின் இல்லத்தின் முன்பாகப் பெரிய கல்லொன்று காணப்பட்ட காரணத்தால் எல்லோரும் அவரைக் 'கல்லடிவேலுப்பிள்ளை' என்று அழைத்தார்கள்.

ஈழத்தின் புகழ்பூத்த புல

**சந்திரன் பிரபு**
(உரும்பிராய்)

வர்களில் ஒருவரான இவரது நாமம் எஞ்ஞான்றும் தமிழர் தம் நெஞ்சங்களில் நிலைத்திருக்கும் என்பது திண்ணம். ★

### நாளை

மாசி 25
புதன்கிழமை
திதி: துதியை
முற்பகல் 10.30 வரை.
நட்சத்திரம்: உத்தரட்டாதி
காலை 7.54 வரை
சுபநேரம்: 4.54—6.24
ராகுகாலம் 12.24—1.54
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதய வாக்கு

கடந்து போன விஷயங்களைப் பற்றிக் கவலைப்பட்டுக் கண்ணீரை மேன் மேலும் வீணாக்காதீர்கள்.

- ஐரிபைடஸ்

**யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்**

**வைத்தீஸ்வரத் திறைவா!**

ஆலந் தனை உண்டே அன்று அமரர் குலம்
காத்தாய், நீல கண்டன் ஆனாய், உனை நினைப்போர் மனத்திருப்பாய்
காலன் அணுகாமல் நமைக் காத்தே அருள் புரிவாய்
வாலாம் பிகை மகிழும் வண்ணை வைத்தீஸ்வரத் திறைவா!

- சிற்பி

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கஸ்தூரியார் வீதிக்கும் கே. கே. எஸ். வீதியூடாக இணுவிலுக்கும் இடையில் பொன்கட்டி (பவுண்) ஒன்று 1-3-2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கணேஷா ஜுவலறி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

(74223)

சிவன் வீதி ஆவரங்கால் எனுமிடத்தைச் சேர்ந்த செல்வி கௌரி துரைசிங்கம் என்பவரின் தே. அ. அ. இல; (697591818 V), திரு. பரமநாதன் சுரேசன் என்பவரது தே. அ. அஇல (652910670V) இரு அடையாள அட்டைகளும் இரு மூக்குக் கண்ணாடிகளும் ஒரு பெண்கள் கைக் கடிகாரமும் சேட்டுடன் கீரிமலை தீர்த்தக் கரையில் சிவராத்திரியன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் லிங்கம் சில்க் கவுஸில் (யாழ்) ஒப்படைக்கவும்.

(74245)

### கண்டெடுக்கப்பட்டது

K. K. S. வீதியில் தாவடிப் பகுதியில் தங்கச்சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. தகுந்த ஆதாரம் காட்டி உரியவர்கள் பெற்றுக் கொள்ளவும். தொடர்பு: சிவலிங்கம் (மினிபஸ் நேரக்கணிப்பாளர்) இல. 769, தெல்லிப்பழை.

(74259)

### திருத்த வேலைக்கு

சகலவித சுமராவகைகளும் எலக்ரோனிக் பிளாஷ் கண், மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத் துறைசார்ந்த ஏனைய துணைக் கருவிகளும் திருத்திக் கொடுக்கப்படும். சு. நாராயணசாமி, இல. 301, கஸ்தூரியார் வீதி, மேல்மாடி. (கன்னாதிட்டிச்சந்திக்கு அருகில்)

(74191)

### விற்பனைக்கு

புத்தகத்தோடு கூடிய சாளி மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திரு. K. கனகரட்ணம், 360, கஸ்தூரியார் வீதி, (நாவலர் வீதி, சந்திக்கருகில்), யாழ்ப்பாணம்.

(74230)

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் நடைமுறையில் பேசப்பயில [ புதிய பிரிவு ஆரம்பமாகவுள்ளது. புதன், வியாழன், சனி, ஞாயிறு 12 மணி] வாரம் 4 வகுப்புக்கள். அனுபவம் மிக்க ஆசிரியர்:— ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(74221)

## உதவித்திட்டம்

புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டம் ஒன்றைத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த அடிப்படையில் 7 புதிய கண்டுபிடிப்பாளர்கள் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாகப் பெற்றுக்கொண்டனர்.

அமைச்சர் திஸநாயக்க இந்தக் கண்டுபிடிப்பாளர்களுக்கு அன்பளிப்புக்களை வழங்கினார்.

புதிய கண்டுபிடிப்புகளில் தானியங்கி பாதுகாப்புமுறை, கைகால்களை இழந்தோருக்கான இயந்திரக்கை, ரயில்வே சமிக்ஞை முறை, கயிறு திரிக்கும் இயந்திரம், நீர் இறைப் பதைக் கட்டுப்படுத்தும் முறைகள் என்பன அடங்கும்.

(இ-9)

# கண்ணிவெடி விழிப்புணர்வு பரீட்சை 14 ஆம் திகதி நடைபெறும்

யாழ்ப்பாணம், மார்ச் 7

ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் அனுசரணையுடன் யாழ். குடாநாட்டின் பாடசாலை மாணவர்களுக்கான கண்ணிவெடி விழிப்புணர்வு தொடர்பான பொதுப் பரீட்சை எதிர்வரும் 14 ஆம் திகதி ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

கண்ணிவெடிவிழிப்புணர்வு வழங்கப்பட்ட குறிப்பிட்ட பாடசாலைகளில் நான்கு பிரிவுகளாகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

பிரிவு I (தரம் 1–2), பிரிவு II (தரம் 3 5), பிரிவு III (தரம் 6–10), பிரிவு IV (தரம் 11-13)

மேற்படி பரீட்சை நடைபெறவுள்ள பாடசாலைகளின் விவரம் வருமாறு:—

★ யாழ். சென் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்.
★ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை.
★ பூம்புகார் அ. த. க.
★ அரியாலை கிழக்கு அ. த. க.
★ கோண்டாவில் பரஞ்சோதி வித்.
★ கோண்டாவில் இராமகிருஷ்ண வித்.
★ ஊரெழு கனேசா வித்.
★ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.
★ உரும்பராய் இந்துக் கல்லூரி.
★ உரும்பராய் சைவத் தமிழ் வித்.
★ இடைக்காடு மகா வித்.
★ அச்சுவேலி மகா வித்.
★ அச்சுவேலி புனித திரேசா வித்.
★ அச்செழு சைவப்பிரகாச வித்.
★ யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி.
★ வைத்தீஸ்வராக்கல்லூரி
★ நாவாந்துறை றோ. க. வித்.
★ பாஷையூர் சென் அந்தனிஸ் றோ. க. மகளிர் வித்.
★ கொழும்புத்துறை சென் ஜோசப் வித்.
★ சென். ஜேம்ஸ் ஆண்கள் வித்.
★ கொழும்புத்துறை இந்து மகா. வித்.
★ புனித றோக்ஸ் றோ. க. வித்.

குறிப்பிட்ட பாடசாலைகளில் இருந்து மூன்று ஆசிரியர்களின் பெயர் விவரங்களை 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பு யாழ். கல்வி வலயத்தில் ஒப்படைக்குமாறு பாடசாலை அதிபர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட பரீட்சைக்கு முதல் நாள் 13 ஆம் திகதி ஒரு மணிக்கு பரீட்சைக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் வினாத்தாள் பொதிகளை யாழ். கல்வி வலயத்தில் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-10)

## விபத்துக்கள் அதிகரிப்பு

வடமராட்சிப் பகுதியில் மோட்டார்சைக்கிள் விபத்துக்கள் அதிகரித்துள்ளன.

கடந்த ஒரு வார காலத்தில் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி படுகாயமடைந்த ஐந்து பேர் மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(க–173)

## கண்ணீர் அஞ்சலி

எமது முன்னாள் ஆசிரியை

திருமதி பு. இரவிந்திரநாதன்

அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி சின்னத்துரை சின்னம்மா

அவர்களின் மறைவால் கலங்கி நிற்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.

யா/ கந்தர்மடம்

சைவப்பிரகாசவித்தியாலயம்.

(74252)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்; 26 — 03 1914



மறைவு; 03 — 02 — 2000

### அமரர் சின்னையா அரசரெத்தினம்

(அநுராதபுரம் – மாவடி)

நாளை 08 — 03 — 2000 ஆம் திகதி நடைபெறவிருக்கின்ற அன்னாரின் வீட்டுக் கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!

அன்னாரின் பிரிவால் வாடும்

மனைவி - பார்வதி

மக்கள், மருமக்கள்,

பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தாமரைக்குளத்தடி, துன்னாலை, கரவெட்டி,

(சி–11326)

## நாளை காங்கேசனுக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 7

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அதிகாரிஎன். ஜீவேஸ்வரா நாளை புதன்கிழமை காங்கேசன்துறைக் கைதிகள் தடுப்பு முகாமுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப்பார் வையிடவுள்ளார்.

அத்துடன் கைதிகளின் உறவினர்களால் அவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு மற்றும் கடிதங்களையும் இவர் கையளிப்பார்.

(இ-10)

## யுத்தக் கைதிகளை...

(7 ஆம் பக்கத் தொடர்)

''நாங்கள்இங்கிருப்பதை விட ஒரு புதுமையான சுதந்திர உணர்வை அப்போது உணர்ந்தோம். உண்மையில் இவர்கள்தானா எங்களுடன் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர் என்ற எண்ணம் தோன்றியது. மனதில் இருந்த பயம் எங்கே போனதென் றே தெரியவில்லை'' என இக் குழுவைச் சேர்ந்த ஒருவர் பின்னர் தெரிவித்தார்.

### ஆயிரம் பொதுமக்கள் வரை கூடி இருந்தனர்

அதன்பின்னர் விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவினரின் வாகனங்களில் அவர்கள் ஏற்றப்பட்டு மல்லாவி நோக்கிப் பயணத்தை ஆரம்பித்தனர். பின்னர் மாலை 4. 30 மணியளவில் புதுக்குடியிருப்பை அடைந்தனர்.

விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவின் தலைமைப் பணியகம் அங்கிருந்தது. அது ஒரு வசதிமிக்க கட்டடம் ஆகும். குழுவினரை வரவேற்கச் சுமார் ஆயிரம் பொதுமக்கள் அங்கு கூடியிருந்தனர். எவரிடமும் ஆயுதங்கள் இருக்கவில்லை.

''அங்கு மனிதத்தன்மையின் புதுமையான குணஇயல்புகளை நாங்கள் உணர்ந்தோம். எவ்வாறாயினும் மனிதத்தன்மையைத் தங்கள் மதிப்பவர்கள் என்பதை விடுதலைப் புலிகள் தங்கள் செயற்பாடுகள் மூலம் நிரூபித்தனர். வேறுபட்ட எண்ணங்களையும் உணர்வுகளையும் கொண்டிருந்த எங்களுக்கு விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் ஒரு புதுமையான தைரியத்தை அளித்தது'' என்று குழுவினைச் சேர்ந்த ஒருவர் கூறினார்.

செவ்வாய்க்கிழமை இரவு சுமார் 7. 30 மணி இருக்கும். உண்ணாவிரதக் கைதிகள் அங்கு அழைத்து வரப்பட்டனர்.

''அந்தக் காட்சி எத்தகைய சோகம் நிறைந்தது என்றோ அல்லது மகிழ்ச்சியானது என்றோ என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. எனது மகன் மிகவும் மெலிந்து காணப்பட்டார். கண்கள் கண்ணீரால் நிறைந்திருந்தன. நாங்கள் பிள்ளைகளுடன் இணைந்து உண்ணாவிரதம் இருப்பதெனத் தீர்மானித்தோம்'' என்று இந்தக் குழுவைச் சேர்ந்த ஒரு தாயார் தெரிவித்தார்.

### புலிகளின் விருந்தோம்பல்

தமிழ்ச்செல்வனைச்சந்திக்க வேண்டும் என இவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். இவர்களது வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டது. மிகச் சிறந்த முறையில் இவர்களுக்கு விருந்தோம்பல் அளிக்கப்பட்டது. மலசல கூடத்துக்குச் செல்ல இவர்களுக்கு தண்ணீர் கூடக் கொண்டு வந்து கொடுத்தனர். மறு நாள் இவர்களைத் தமிழ்ச்செல்வன் சந்தித்தார் ''எங்கள் அனைவர் மீதும் உங்கள் அரசாங்கம் ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறது'' எனத் தமிழ்ச்செல்வன் கேட்டார்.

அரசின் பிரதிநிதி ஒருவர் வந்திருந்தார் 15 பேரையும் விடுவித்திருக்கலாம் என்ற உணர்வு தமிழ்ச்செல்வனைச் சந்தித்த பின்னர் இவர்களுக்கு ஏற்பட்டது. பத்திரிகையாளர்களும் வந்திருந்தால் அது சமாதானத்திற்கு ஓர் நல்ல வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கும் என்று இவர்கள் கருதினர்.

வன்னி சென்ற குழுவின் ஒரு அங்கத்தவரான திருமதி மேனுஹாமி கூறியதாவது.

''நான் அங்கு சென்ற போது சுகவீனமடைந்தேன் ஏற்கனவே எனது மகனும் நோய் வாய்ப்பட்டிருந்தார். அரச மருத்துவமனையில் நாங்கள் இருவரும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்றோம். அரசாங்க மருத்துவர்கள் தான் அங்கு பணிபுரிகிறார்கள். எல்லோரும் தமிழர்கள் ஆனால் எங்கள் பகுதிகளை விட அங்கு நோயாளர்களை நன்கு கவனிக்கிறார்கள்.

எங்களை அம்மான் என்பவர் கோயிலுக்கும் கூட்டிச் சென்றார். ஞாயிறன்று எங்களை அங்குள்ள இடங்களுக்கு அழைத்துச் சென்றனர். முல்லைத்தீவுக் கடற்கரைக்கும் சென்றோம். என்ன சந்தோசம்? என்ன திருப்தி? எமது பிள்ளைகளுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாது என்ற நம்பிக்கை எமக்கு ஏற்பட்டது.

அந்த ஊர்களில் பொது மக்கள் எமது வரவை எதிர் பார்த்துக் கூடிக் காத்திருந்தனர். அம்மக்கள் சமாதானத்தை வேண்டுகின்றனர். அழுது புலம்பியவாறு எம்மைக் கட்டியணைத்து வரவேற்றனர்.

''யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்துமாறு உங்கள் ஜனாதிபதியிடம் தெரிவியுங்கள்'' என அம் மக்கள் எம்மிடம் கூறினர். யுத்தத்தினால் கரை ஒதுங்கியிருந்த கப்பல் ஒன்றின் சிதைவுண்ட பகுதிகளை எமக்குக் காட்டினர். தமிழ் மக்கள் அனைவருமே சமாதானத்துக்காக ஏங்குகிறார்கள்.

### மல்லாவி வந்தபோது கிடைத்த நற்செய்தி

நாங்கள் ஞாயிறு காலை வன்னியிலிருந்து புறப்பட்டோம். ''எப்படியேனும் ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு உங்களை விடுவிப்போம்'' என எமது பிள்ளைகளுக்கு வாக்குறுதி அளித்துவிட்டே புறப்பட்டோம். 14 நாள்களுக்குள் இப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிடின் மீண்டும் சாகும்வரை உண்ணா விரதத்தில் ஈடுபடவுள்ளதாக எமது பிள்ளைகள் தெரிவித்தனர்.

உணவருந்தாமலும், நீர் அருந்தாமலும் 3 நாள்களுக்கு மேல் உயிர் வாழ முடியாது. அது அவ்வளவு கடினமானது.

நாங்கள் மல்லாவி வந்தடைந்த போது செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரின் பணிமனை எங்களுக்கு ஓர் அறிவிப்பைத் தந்தது. விடுதலைப் புலிகள் விசேட செய்தி ஒன்றை விடுக்கவுள்ளனர் என அவர்கள் தெரிவித்தனர். சிறைக் கைதிகளில் நால்வரை விடுவிப்பதான செய்தியே அது ஆகும்.

எமது வன்னிப் பயணம் ஒரு கனவு போல அமைந்திருந்தது. புலிகளின் வாகனங்களில் இருந்து இறங்கி சிறிது நேரம் உரையாடிவிட்டு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வாகனங்களில் ஏறினோம். அதுவும் எங்களுக்குத் திருப்தியை அளித்தது. செவ்வாய் காலை புறப்பட்டு பிற்பகல் 3. 00 மணிக்கு கொழும்பை வந்தடைந்தோம்.

இப்படி அவர் கூறினார் — சிறைக்கைதிகளின் பெற்றோர்களின் வன்னி விஜயம் இவ்வாறு முடிவுற்றது. இது ஒரு பயணத்தின் முடிவாயினும் அவர்களைப் பொறுத்தவரை ஒரு புதிய அத்தியாயத்தின் ஆரம்பம் என்றே கூற வேண்டும். ★

# ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது காணி அதிகாரம் பற்றியே இணக்கம்

## வேறு எதிலும் உடன்பாடு இல்லை என்கிறார் மாவை

கொழும்பு, மார்ச் 7

ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது காணி அதிகாரம் தவிர வேறு எதிலும் இணக்கம் ஏற்படவில்லை அவ்வாறிருக்கும் போது தமிழ்க் கட்சிகளுடன் இணக்கம் ஏற்பட்ட எந்த விடயங்கள் குறித்து அரசாங்கம் ஐ.தே. கவுடன் ஆராயப் போகிறது?

தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்,

எதிர்வரும் 9 ஆம் திகதி பேச்சுக்கு வருமாறு கோரி ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி எழுதிய கடிதத்தில் தமிழ்க் கட்சிகளுடனான பேச்சுக்களின் போது இணக்கம் காணப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும் ஆராயலாம் என்று தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட போதே மாவை சேனாதிராஜா மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ்க் கட்சிகளுடனான பேச்சுக்களில் காணி அதிகாரம் தொடர்பாகவே முன்னேற்றம் ஏற்பட்டது. ஏனைய விடயங்கள் எவற்றிலும் இணக்கம் காணப்படவில்லை

இந்தப் பேச்சுக்களின் போது அதிகாரப் பரவலாக்கல் உட்பட்ட பல முக்கிய விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவே இல்லை.

இந்த நிலையில் தமிழ்க் கட்சிகளுடன் இணக்கம் காணப்பட்ட எந்த விடயங்கள் குறித்து அரசு ஐ. தே. கவுடன் ஆராயப் போகின்றது என்று தெரியவில்லை.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-6)

## முறைசாராக் கல்வி

கொக்குவில், மார்ச் 7

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் பாடசாலையை விட்டுவிலகிய மாணவிகளுக்கு சிகை அலங்காரப்பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் இணைய விரும்புபவர்கள் வித்தியாலய அதிபருடன் தொடர்பு கொண்டு பெயர்ப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க-69)

# பெரும் சிரமத்துடன் பயிலும் உமையாள்புரம் மாணவர்கள்

படை நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து இயங்கும் கிளிநொச்சி உமையாள்புரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களில் தொண்ணூறு சதவீத மாணவர்கள் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பாடசாலையில் கல்வி கற்கும் நானூறு மாணவர்களில் பெரும்பாலானோர் ஆனையிறவு உமையாள்புரம், ஊரியான் பகுதிகளில் இருந்து படை நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து கல்வியைத் தொடரும் மாணவர்கள் ஆவர்.

மண் குடிசைகளில் இயங்கும் இந்தப் பாடசாலையில் வாங்கு மேசைகள் இல்லாத நிலையில் தரையில் அமர்ந்திருந்தே மாணவர்கள் கல்வி கற்கிறார்கள்.

ஆசிரியர்கள் அமர்வதற்குக் கூடக் கதிரைகள் இல்லை.

பாடசாலைக் கூரைகள் சிதைந்து சேதங்களுக்கு உள்ளாகி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-8)

## சிறுவன் காயம்

மகாசிவராத்திரி விழாவுக்கு கீரிமலைக்குச் சென்று திரும்பிய சிறுவன் எரிபொருள் பவுஸருடன் விபத்துக்குள்ளாகிப் படுகாயமடைந்தார்.

மல்லாகத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இந்திரராசா இலட்சணன் (வயது 8) என்பவரே படுகாயமடைந்தவராவார்

கீரிமலையில் இருந்து வந்து மல்லாகத்தில் பஸ்ஸிலிருந்து இறங்கியபோதே விபத்து நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார். (இ-15)


நீங்கா நினைவுகளில்

புத்தாயிரமாம் ஆண்டில்

ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் பொன்னன் புலவர்

(உரிமையாளர், புலவர் வீடியோ)

மண்ணுலகில் மாந்தருடன்: 09-12-1944

விண்ணுலகில் மாதேவனுடன்: 18-02-1999

திதி: துதியை 07-03-2000

எங்கள் அருமைக் குலவிளக்கே உங்கள் நினைவு தான் எம்மை விட்டகலுமோ? இப்பிறப்பில் உம்மை நல்ல கணவனாய், நல்ல தந்தையாய் அடைய என்ன மாதவம் செய்திட்டோம். குருவாக இருந்து எம்மை ஆளாக்கி விட்டவரே நாடக இசைத்துறையிலும் வீடியோப் படப்பிடிப்புத் துறையிலும் மங்காப் புகழ் சேர்த்தவரே. கடமையில் கண்ணாயிருந்து பணி செய்த கண்ணியவானே! கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்க வைத்துவிட்டீரே! விடம் தலைக்கேறியது போல் துடிக்கின்றோம் நாம். உறக்கத்தில் மீளா உறக்கத்தை ஏற்றீரோ எம் இதய தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடையச் சிரம்தாழ்த்தி அஞ்சலிக்கின்றோம்,

அன்பு மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

புலவர் வீடியோ,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

T. P. No. 070 - 212973

(74231)


# வல்வெட்டித்துறை மருத்துவமனை சேவையில் கொடிகட்டிப் பறக்கிறது

## கட்டடத் திறப்புவிழாவில் உரை

நெல்லியடி, மார்ச் 7

யாழ். மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் பல அரச மருத்துவமனைகள் இருக்கின்ற போதிலும் வடபகுதியில் வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையே வைத்தியசேவையில், இன்று கொடிகட்டிப் பறக்கின்றது.

மேற்கண்டவாறு யாழ். சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் எஸ். மகேந்திரன் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறைமாவட்ட மருத்துவமனையில்நிர்மாணிக்கப்பட்டபுதிய கட்டடங்களைத் திறந்து வைத்து அவர் உரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வு மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி டாக்டர் கே. மயிலேறும்பெருமாள் தலைமையில் நடைபெற்றது

எஸ். மகேந்திரன் அங்கு மேலும் பேசுகையில் ''திரை கடல் ஓடியும் திரவியம்தேடு'' என்ற பழமொழிக்கேற்ப வல்வெட்டித்துறையில் ஒரு காலத்தில் மக்கள் புகழுடன் வாழ்ந்தனர்.

அண்மைக்கால வன்செயல்களினால் வர்த்தகத்தைச் சரியாகச் செய்யமுடியாத சூழ்நிலையில் இப்பகுதி மக்கள் வசிக்கின்ற பொழுதிலும், நல்லமனத்தோடு இந்த வைத்தியசாலையின் குறைபாடுகளையும் நிவர்த்தி செய்து வருகின்றார்கள்.

வல்வெட்டித்துறையைப் பொறுத்த வரை, தமது பகுதி நோயாளிகள் பாதிக்கப்படக் கூடாது என்ற நல்ல நோக்கோடு தம்மாலியன்ற பங்களிப்பை வைத்தியசாலைக்கு வழங்குவதை நாம் எக்காலமும் மறக்கக்கூடாது.

சேவை நோக்கோடு, பணிபுரியும் மாவட்ட வைத்திய அதிகாரி கே. மயிலேறும் பெருமாளின் அயரா உழைப்பினால், மேன்மேலும் இந்த வைத்தியசாலை, வளர்ந்து செல்வது பாராட்டுக்குரியது.

### சிறந்த மருத்துவமனை

யாழ்ப்பாணத்திலுள்ள மாவட்ட மருத்துவமனைகளில் சிறந்த மருத்துவமனை எது என்று கேட்டால், அது வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையாகத் தான் இருக்கும்.

மாவட்ட வைத்திய அதிகாரியின் சேவைக்குஇங்குள்ள ஊழியர்களது ஒத்துழைப்புப் பெரிதும் உதவுகின்றதைக் காண முடிகின்றது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நோயாளிகள் 24 மணி நேரமும் கட்டிலில் படுத்துறங்க முடியாது அவர்களுக்குச் சலிப்புத் தன்மை உருவாகும் இதனை மாற்றும் நல்நோக்கோடு, தான் இன்று இங்கு நூலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது, இவ் வைத்தியசாலையின் எதிர்கால வளர்ச்சிக்கு இது ஓர் எடுத்துக்காட்டாக அமைகின்றது.

சுகாதாரத் திணைக்களத்தைப் பொறுத்த மட்டில், எல்லா உதவிகளையும் அரசிடம் எதிர் பார்க்க முடியாத நிலையில் இருந்து வருகிறது. எனினும் இங்கு பழுதடைந்திருக்கும் சமையல் கூடத்தைப் புனரமைப்புச் செய்வதற்குரிய நிதியை அரசிடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்

இதேவேளை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம், யாழ். மாவட்டத்தில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு, புனரமைப்பு வேலைகள் மேற்கொண்டு வருவது மிகவும் போற்றுதற்குரியது அண்மையில் பண்டத்தரிப்பு அரசினர் மருத்துவமனையிலும் 20 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்பு வேலைகளை நடைமுறைப்படுத்தியுள்ளது இதனை விட, காரைநகர், ஊர்காவற்றுறை அரசினர் மருத்துவமனைகளிலும் புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்துள்ளனர் அவர்களின் உதவியினால் தான இன்று, வடபகுதியில் நாம் சுகாதாரத்தை மேம்படுத்தி வருகின்றாம்.

### வைத்திய சேவையே முக்கியமானது

ஆஸ்பத்திரிகளுக்கு கட்டடம் மட்டும் தேவை இல்லை வைத்தியம் தான் மிக முக்கியமாகின்றது.

யாழ். மாவட்டத்தில், மலேரியா இரத்தப் பரிசோதகர் பதவிக்கு 26 பேர் தேவைப்படுகின்றபோதிலும் தற்பொழுது மூவர் மட்டுமே சேவையிலிருக்கின்றார்கள் இது மிக வேதனைக்குரியதாகும்—என்றார்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரக யாழ். மாவட்ட இணைப்பதிகாரி செல்வி நில்டா பேசுகையில்;- வன்செயல்களினால் பாதிக்கப்பட்டிருக்கும் கட்டட வேலைகளைப் புனரமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் எமது நிறுவனத்துக்கு இப்பகுதி மக்களும் பொது நிறுவனங்களும் தமது பங்களிப்பை வழங்குவதன் மூலம் யாழ். மாவட்டத்தில் ஒரு முன்னேற்றமான செயல்வடிவங்களை எம்மால் மேற்கொள்ள முடியும்— என்றார்.

பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி பேசும் போது தொழிற்துறையினால் நொந்து வாடியிருக்கும் வல்வெட்டித்துறை மக்களுக்குச் சிறந்த சேவை புரிந்துவரும் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் மயிலேறும் பெருமாளின் சிறந்த அர்ப்பணிப்பில் தான் அவரின் ஆற்றலுக்கு நாமும் கைகொடுத்து வருகின்றோம்.

எம்மைப் பொறுத்தவரையில் சில சில தடங்கல்கள் இருக்கின்ற வேளையிலும் பயனாளிகள் எவ்விதம் தமது பங்களிப்பைச் செலுத்துவார்கள் என்பதில் எமக்குச் சந்தேகம் இருப்பதனால் சில திட்டங்களை நிறைவேற்ற முடியாதுள்ளது இருந்த போதிலும் செயற்திறனைப் பொறுத்த மட்டில் மாவட்ட வைத்திய அதிகாரி மயிலேறு பெருமாளின் விடாமுயற்சி மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது—என்றார்.

வல்வெட்டித்துறைமாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. மயிலேறும் பெருமாள் பேசும்போது—

நான் பதவி ஏற்றுக் கொண்ட சமயம் 17 நோயாளிகள்தான் காணப்பட்டனர். தற்பொழுது 70 நோயாளிகள் வாட்டுக்களில் தங்கிருந்து சிகிச்சை பெறுகின்றார்கள் — என்றார்.

இந்த விழாவில் பருத்தித்துறை பிரதேச செயலக உதவித் திட்டமிடற் பணிப்பாளர் என். மகேந்திரன், வல்வெட்டித்துறை நகராட்சிமன்றச் செயலாளர் பீ. கனகசபாபதி, யாழ். பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினர் சட்டத்தரணி ஆர். உருத்திரா ஆகியோரும் சிறப்புரையாற்றினார்கள்,

திறப்புவிழாவில் ஆண்கள் விடுதி புனரமைப்புக் கட்டடத்தை அகதிகளுக்கான ஐ.நா. தூதரக யாழ்ப்பாண இணைப்பதிகாரி செல்வி நில்டாவும் வைத்தியசாலைக்குநன்னீர் வழங்கலை வல்வெட்டித்துறை நகரசபை செயலாளர் டீ. கனகசபாபதியும் மினி சத்திரசிகிச்சைக் கூடத்தைப் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமியும் நோயாளர் வாகனத் தரிப்பிடத்தை யாழ். சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனை நிர்வாக அதிகாரி எஸ். மகேந்திரனும் நூலகத்தைப் பருத்தித்துறை பிரதேச செயலக உதவித் திட்டமிடற் பணிப்பாளர் என். மகேந்திரனும் திறந்து வைத்தனர். (இ-169)

### அரசமைப்புச் சீர்திருத்தம்

# தமிழ்க் கட்சிகளுடன் அரசு மீண்டும் பேச்சு நடத்தும் வாய்ப்பு இல்லை

## ஜோசப் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 7

அரசு முன்வைத்துள்ள தீர்வு யோசனைகள் குறித்து தமிழ்க் கட்சிகளுடன் அரசு இனிப்பேசும் வாய்ப்பு இல்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராஜசிங்கம் தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கூட்டுக் குழுவுக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையில் எப்போது மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பமாகும் எனக்கேட்ட போதே அவர் இப்படிக் கூறினார்.

அவர்மேலும் தெரிவித்ததாவது:—

கடந்தகாலங்களில் பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம், இலங்கை-இந்திய ஒப்பந்தம்ஆகியன ஏற்பட்ட சமயம் அவற்றுக்கு எதிராகப் பௌத்த பீடங்கள் குரல் கொடுத்தன. அதன் காரணமாக அந்த ஒப்பந்தங்கள் யாவும் நடைமுறையில் வராமல் தோல்வி கண்டன.

மீண்டும் அதே நிலை தோன்றியுள்ளது. அரசு முன்வைத்த யோசனைகளின் மூலம் ஏதாவது முன்னேற்றகரமான தீர்வு ஒன்று எட்டப்படும் என நம்பினோம். ஆனால் அந்த நிலை எட்டப்படும் சாத்தியம் காணப்படவில்லை.

தமிழ்க்கட்சிகளுடன் அரசு பேச்சுக்கள் நடத்தி வந்தது. தமிழ்மக்களின் முக்கிய பிரச்சினைகள்தொடர்பாகதமிழ்க் கட்சிகளின் நிலைப்பாட்டை அறிய முன்னர் ஐ. தே. கவுடன் பேச்சுக்களை அரசு ஆரம்பித்துள்ளது.

வடக்கு — கிழக்கு இணைப்புப் போன்ற முக்கிய விடயங்கள் தொடர்பாக தமிழ்க் கட்சிகளுடன் கலந்தாலோசித்து விட்டே அரசு ஐ. தே. கவுடன் பேச்சுக்களை ஆரம்பித்திருக்க வேண்டும். பேரினவாத பௌத்த பிக்குகளின் எதிர்ப்பு ஒரு புறம். அரசாங்கத்தின் அணுகுமுறை மறுபுறம். இந்த நிலையில் தமிழ்க் கட்சிகளுடன் மீண்டும் பேச்சுக்கள் இடம்பெறும் வாய்ப்பு அருகிவிட்டது — என்றார் அவர்.

(இ-3)

## நீதிவானை அவமதித்தசிப்பாய்கள் எச்சரித்து விடுவிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், மார்ச் 7

பருத்தித்துறை மாவட்ட நீதிவானை வழிமறித்து அவமதித்த சிப்பாய்கள் மறுநாள் அவரிடம் மன்னிப்புக் கேட்டனர்.

பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் தமது பாரியாருடன் கடந்த சனிக்கிழமை இரவு 7 மணியளவில் ஒட்டோ ஒன்றில் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தார்.

குஞ்சர் கடைச் சந்தியில் அமைந்துள்ள சோதனை நிலையத்தில் பணியில் இருந்த இரு சிப்பாய்கள் நீதிவானை அவமதிக்கும் விதத்தில் நடந்துள்ளனர்.

இது குறித்து நீதிவான் பருத்தித்துறைக் கட்டளை அதிகாரி பிரிகேடியர் சமரவீரவுக்கு முறைப்பாடு செய்தார்.

அதைத் தொடர்ந்து பிரஸ்தாப இரு சிப்பாய்களும் மறுநாள் நீதிவானின் வாசஸ்தலத்தில் நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

இருவரும் நீதிவானிடம் மன்னிப்புக் கோரினர்.

''நீதிவானுடனேயே இப்படி நடக்கும் நீங்கள் பொது மக்களுடன் எப்படி நடப்பீர்கள். இப்படி நடக்கக்கூடாது'' என்று புத்திமதியும் எச்சரிக்கையும் விடுத்து இருவரையும் நீதிவான் விடுதலை செய்தார்.

(இ-3)

## போதனா வைத்தியசாலையில் பல் டாக்டர் பற்றாக்குறை தீரும்

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ். போதனா வைத்தியசாலை, பல் வைத்திய சிகிச்சைப் பிரிவில் நிலவி வந்த டாக்டர்கள் பற்றாக்குறை ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

நீண்ட நாள்களாக நிலவி வந்த வெற்றிடங்களில் இரண்டு நிரப்பப்பட்டுள்ளன.

கடந்த நான்கு வருடங்களுக்கு முன் பயிற்சியை முடித்து வெளியேறியவர்களில் வடபகுதியைச் சேர்ந்த ஒருவரும்தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவரும் யாழ். போதனாவைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் வடபகுதியைச் சேர்ந்தவர் சில நாள்களுக்கு முன் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். தென்னிலங்கையைச் சேர்ந்த மற்றைய டாக்டர் வெகுவிரைவில் வருவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-15)

## ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், மார்ச் 7

ஸ்ரீ இராம கிருஷ்ண பரமஹம்சரின் ஜெயந்தி தினவிழா நாளை புதன்கிழமை திருநெல்வேலியில் உள்ள இராம கிருஷ்ணாலயத்தில் இடம் பெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 5மணிக்குஓங்கார ஆரார்த்தியுடன் ஆராதனையும் தொடர்ந்து மதிய பூசையும் இடம் பெறும்.

மாலை நிகழ்வாக, இராம கிருஷ்ண ஞாயிறு பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இராமகிருஷ்ணாலய இயக்குநர் இ. இராஜமகேந்திரசிங்கத்தின் சிறப்புரையும் இடம்பெறும்.

விழாவுக்கு வருகை தரும் அடியார்களுக்கு பிற்பகல் பிரசாதம் வழங்கப்படும்.

(இ.9)

## பேச்சுக்கான சூழ்நிலையை அரசு ஏற்படுத்தவேண்டும்

### ஐ. தே. கட்சி எம். பி. கோரிக்கை

கொழும்பு, மார்ச் 7

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முதலில் அரசாங்கம் பேச்சுக்கான சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும்.

ஐ. தே. கட்சி எம்..பியான ஜோன் அமரதுங்க நாடாளுமன்றில் உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.

பேச்சுக்களை நடத்துவதற்கான சூழலை ஏற்படுத்துமாறு புலிகள் கூறி உள்ளனர். அதனை ஏற்று அரசாங்கம் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

எமது தலைவர் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண சகல ஒத்துழைப்பையும் தருவதாக அறிவித்துள்ளார்.

அடுத்த ஒரு வருடத்துக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கின்றோம்.

இப்படி அவர் மேலும் கூறினார்.

(இ-6)

## இனநெருக்கடியில்இந்தியநிலைப்பாடு குறித்து தமிழ்க்கட்சிகள் அதிருப்தி

கொழும்பு, மார்ச் 7

இலங்கை விவகாரத்தில் இந்தியா எடுத்துள்ள புதிய நிலைப்பாடு குறித்து தமிழ்க் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்கள் மத்தியில் அதிருப்தி நிலவுகின்றது.'

ஈழத்தமிழர்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கக் கூடிய வகையிலான தீர்வு ஒன்று ஏற்படவேண்டும் என்று இதுவரை காலமும் வலியுறுத்தி வந்தது இந்தியா.

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்த இலங்கை வெளியுறவு அமைச்சுச் செயலாளர் லயனல் பெர்னாண்டோவுக்கும் இந்திய வெளியுறவு அமைச்சுச் செயலாளர் லாலி மான்சிங்குக்கும் இடையில் நடந்த பேச்சுக்களின் போது —

எல்லாத்தரப்பும் ஏற்கக் கூடிய தீர்வே இலங்கைப் பிரச்சின்னக்கு நிரந்தரமானதாக இருக்கும் என்று இந்தியத்தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

இலங்கை விவகாரத்தில் நோர்வே தலையிடுவதை வரவேற்றுள்ள இந்தியா, தமிழர் பிரச்சினை தொடர்பாக எடுத்துள்ள புதிய நிலைப்பாடு தமிழ்க்கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்கள் மத்தியில் அதிருப்தி நிலையை தோற்றுவித்துள்ளது என்று கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

## வாசகர் திருமுகம்

### சோகமயமான சம்பவங்களை கிண்டல் செய்யலாமா?

வடபகுதியில் கைது செய்யப்பட்டு காணாமற் போன எமது உடன்பிறப்புக்களின் நிலைகண்டு மனித நேயமுள்ள மக்கள் கண் கலங்குகின்றனர். இது தொடராமல் இருக்க என்னென்ன செய்யலாம், எவ்வாறு தடுக்கலாம் என மனித நேய அமைப்புக்கள் சிந்திக்கின்றன, நடவடிக்கைகள் மேற்கொள்கின்றன. இந்தச் சமூகத்தின் அங்கமாகிய பொதுமக்களாகிய நாங்கள் இந்த விடயத்தில் எமது பங்களிப்பை வழங்காமல், ''நமக்கென்னையா நம்மட பாட்டில் இருப்பம்'' என்றிருப்பது வேதனைக் குரியது. காணாமற் போனோர் தொடர்பாக அஹிம்சை வழியிலான போராட்டங்கள் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட வேளைகளில் காணாமற் போனோரின் பெற்றோர்களும் மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் சிலரும் சமயப் பெரியார்களும் பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளும் ஒரு சில நலன்விரும்பிகளும் மட்டுமே கலந்து கொள்கின்றனர். ''நமக்கென்னையா நம்மட பாட்டில இருப்பம்'' என்ற நிலையில் உள்ள எமது சமுதாயத்துக்கு ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில் இந்தத் துயரக் காவியத்தை ''அக்கினிப் பெருமூச்சு'' எனும் நாடகத்தை மேடையேற்றியுள்ளனர்.

இந்த நாடகம் பல இடங்களில் மேடையேறுகின்றன. 2000. 02 20 அன்று வடமராட்சியிலுள்ள வட இந்து மகளிர் கல்லூரியிலும் இந்த நாடகம் மேடையேறியது. இந்த நாடகத்தில் ஒரு காட்சி காணாமற் போன எமது சகோதர சகோதரிகளின் உயிரற்ற உடல்கள் கல்லறைக்குள் (ஆனால் உண்மையில் கட்டாந்தரைக்குள்) இருந்து அம்மா! அம்மா!! என ஈனமாகக் கூவி அழைக்கும் நெஞ்சை உருக்கும் காட்சி. இந்த உணர்வு பூர்வமான காட்சியைக் கண்ணுற்ற பலர் கண்கலங்கினர். ஆனால் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த மாணவர்கள் சிலர் தாங்களும் ''ஓம்'' ''ஓம்'' என்று கிண்டலாகக் குரல் எழுப்பினர். இவர்கள் சிறுவர்கள் அல்லர். க.பொ.த (சாதாரணம்) படிக்கும் வயதுடையவர்கள். இவ்வாறான மட்டரகமான நடவடிக்கைகளை மாணவர் சமுதாயம் செய்யக் கூடாது, செய்யக் கூடாதென சம்பந்தப்பட்டவர்கள் அறிவுரை கூற வேண்டும். எதிர்காலச் சந்ததியினராகிய மாணவச் செல்வங்களை நல்ல பாதையில் வழி நடத்திச் செல்லவேண்டிய பாரிய பொறுப்பு பெரியோர்களாகிய எமக்குண்டு என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

இதே நாடகம் யாழ். பல்கலைக்கழகத்தில் 2000. 02. 12 அன்று மேடையேறியபொழுது பொது மக்கள் மிகவும் அமைதியாக இருந்து பார்வையிட்டது மனதுக்கு இதமாக இருந்தது. இந்த முன்மாதிரியை எல்லோரும் பின்பற்ற வேண்டும். சமுதாயத்தின் சமகால நிகழ்வை நாடகமாகத் தயாரித்து நெறிப்படுத்திய தே. தேவானந்த் மற்றும் இதில் பங்குபற்றும் கலைஞர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

சாம் செபஸ்ரியன்

வடபகுதியில் கைது செய்யப்பட்டு
காணாமற் போனோர் பாதுகாவலர்
சங்கத்தின் வடமராட்சிப் பிரதிநிதி.

### அராலி வடக்கு புறக்கணிப்பு

அராலி வடக்கு, அராலியூர்ப்பகுதி இதுவரை மின்சார வசதி கிடைக்கப் பெறாத இருள் சூழ்ந்த பிரதேசமாகவே இருந்து வருகிறது. வட்டுக்கோட்டைத் தொகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டு விட்டது என்று உயர் அதிகாரிகள் பத்திரிகைகள் மூலமாகக் கூறிக் கொண்டாலும் வட்டுக்கோட்டைத் தொகுதியைச் சேர்ந்த இப்பகுதிக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படாதது புரியாத புதிராக உள்ளது.

சில பகுதி மக்கள் 24 மணி நேரமும் மின்சார வசதியைப் பெறுகின்றார்கள். இதன் மூலம்சகல வசதிகளையும் அனுபவிக்கின்றார்கள். ஆனால் இப் பகுதி மக்கள், மாலை 6 மணி தொடக்கம் இரவு 12 மணிவரையாவது மாணவர்கள் கல்வி பயில்வதற்குக் கூட மின்சார வசதி இல்லாமல் அல்லற்படுகின்றார்கள்.

ஒன்றரை வருடத்துக்கு மேலாக ஒரு சில மின் கம்பங்கள் இப்பகுதியில் போடப்பட்டிருந்தாலும் இது வரை ஆமை வேகத்திலேயே ஒரு சில பகுதிகளில் மட்டும் மின் கம்பங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக உயர் அதிகாரிகளுடன் தனிப்பட்ட முறையிலும் சன சமூக நிலையங்களூடாகவும் தொடர்பு கொண்ட போது ,''மின்சார சபையிடமிருந்து அனுமதி கிடைக்கவில்லை,'' ''மின் கம்பங்கள் பற்றாக் குறை'',''மின் மாற்றிவரவில்லை'',''மின்இணைப்புக் கம்பிகள் போதாமை'' போன்ற நொண்டிச் சாட்டுகளைக் காரணங்களாகக் காட்டுகின்றனர்.

ஒரு சில மாதங்களில் இப் பகுதிக்கு மின்சாரத்தைப் பெற்றுத்தருவதாக ஈ.பி. டி. பி. கட்சியினரும் வாக்குறுதியளித்திருந்தனர். ஆனால் இதுவரை எந்த வாக்குறுதியும் எவராலும் நிறைவேற்றப்படவில்லை. உயர் அதிகாரிகளினதும் அரசியல்வாதிகளினதும் இதயத்தில் இருக்கும் இருள் நீங்கினால்தான் மக்கள் மத்தியில் இருள் நீங்குமா? இவை யாவற்றுக்கும் பொறுப்பானவர்கள் பொறுப்புணர்ச்சியுடனும் கடமையுணர்வுடனும் செயற்படுவார்களா?

குமார்

அராலி.

# தமிழ்ப் பெண்கள் மீதான வன்முறையை கண்டித்து கனடாவில் ஆர்ப்பாட்டம்!

## நூற்றுக்கணக்கானோர் திரண்டனர்

றொறன்ரோ,மார்ச்7

இலங்கையில் தமிழ்ப்பெண்கள் மீதான படையினரின் வன்முறைகள் மற்றும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் ஆகியவற்றைக் கண்டித்து கடந்த ஞாயிறன்று கனடாவில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

நாளை புதன்கிழமை சர்வதேச ரீதியாக இடம்பெறவுள்ள மகளிர் தினத்தை முன்னிட்டு இந்தப் பேரணி நடத்தப்பட்டதாக பேரணியை ஏற்பாடு செய்த உலகத்தமிழர் இயக்கத்தின் பெண்கள் அமைப்பு தெரிவித்தது.

றொறன்ரோ பல்கலைக்கழகத்தின் முன்னால் கடந்த ஞாயிறு காலை 9 மணிக்கு ஆரம்பமான இந்தப் பேரணி றொறன்ரோ நகரின் பொது மண்டபம் ஒன்றில் இடம்பெற்ற கண்காட்சி ஒன்றைத் தொடர்ந்து முடிவடைந்தது.

இந்தக் கண்காட்சியில் இலங்கையில் தமிழ்ப்பெண்கள் எதிர்நோக்கும் வன்முறைகள் குறித்த விளக்கப்படங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

பேரணியில் கலந்து கொண்டோர் 'ஸ்ரீலங்கா அரச பயங்கரவாதத்தினால் கிழிக்கப்பட்டவை ஆடைகள் மட்டுமல்ல எமது ஆன்மாவும் தான்', 'இனி வாய் திறந்து எழுவோம் வருக எங்கள் பெண்களே' என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை வைத்திருந்தனர்.

தமிழ்ப் பெண்கள் அமைப்புக்கள் பலவற்றைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான உறுப்பினர்கள் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர். (ஐ-7-க)

## இளைஞர் கொள்கை வகுப்பு சந்திப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்7

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் இளைஞர் கொள்கை வகுத்தல் சந்திப்பு ஒன்று இன்று காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் நடைபெறும் இச்சந்திப்பில் திணைக்களத் தலைவர்கள் மற்றும் பல உயர் அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இளைஞர் சேவைகள் மன்ற உறுப்பினர்களும் இதில் கலந்து கொள்ள உள்ளனர்.

# தாக்குதல் சம்பவம் ஒன்றில் அறுவர் கைதாகி நீதிமன்றில்

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களான மூன்று இளைஞர்களைத் தாக்கிக் காயப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஆறு இளைஞர்கள் நேற்று பொலீஸாரினால் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

யாழ்.நாவாந்துறை வடக்கைச் சேர்ந்த நீக்கிலஸ் பாலதாஸ் என்பவரும் அவரின் இரு சகோதரர்களுமே முறைப் பாட்டுக்காரர்கள் ஆவர்.

தனது கணவரான நீக்கிலஸ் பாலதாஸ் சம்பவதினமான கடந்த 4ஆம் திகதி நாவாந்துறைப் பகுதியில் உள்ள விளையாட்டு மைதானம் ஒன்றில் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியை பார்க்கச் சென்ற போது மேற்படி குழுவினர் அங்கு வைத்து அவரைத் தாக்கினர் என்றும் -

பின்னர் வீடு திரும்பிய கணவரையும் அவரின் இரு சகோதரர்களையும் வீடு புகுந்து தாக்கியதாகவும் -

நீக்கிலஸ் பாலதாஸின் மனைவி யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவித்திருந்தார்.

முறைப்பாட்டைத் தொடர்ந்து தாக்கியதாகக் கூறப்படும் 6 பேரையும் சந்தேகத்தின் பேரில் கடந்த 5ஆம் திகதி பொலீஸார் கைது செய்தனர்.

வேலுப்பிள்ளை சகாயசீலன், பேதுறுப்பிள்ளை அன்ரன் தாஸ், பேதுறுப்பிள்ளை றென்சி, சே. எடின்பரோ, பேதுறுப்பிள்ளை ஜேசுதாசன் மற்றும் யேசுதாசன் செபமாலைதாஸன் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இந்த வழக்கை விசாரணை செய்த யாழ். பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு, சந்தேக நபர்களை மீண்டும் நாளை நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு உத்தரவிட்டார். (இ-9)

# கொக்குவில், சுதுமலை பகுதிகளில் இருவர் கைது

யாழ்ப்பாணம்,மார்ச்7

கொக்குவில் மற்றும் சுதுமலைப் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள் இருவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக விற்பனையாளரான சரசானந்தவேல் செல்வக்குமரன் (பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு - வயது 24) என்பவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார்.

சமரபாலா ஜோன்சன் (சுதுமலை தெற்கு, சாவற்காடு - வயது 26) என்பவர் கடந்த இரண்டாம் திகதி கைது செய்யப்பட்டார்.

இவர் சுன்னாகம் பகுதிக்கு வியாபாரத்துக்காகச் சென்ற சமயம் காணாமற் போனதாக உறவினர்களால் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டிருந்தது.

இருவரது கைதுகளையும் உறுதிசெய்யும் முகமாக படையினரால் பற்றுச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. (இ-9)

# தென்மராட்சி கல்விவலயத்தில் பண்ணிசைப் போட்டிகள்

தென்மராட்சி கல்விவலயத்தின் பாடசாலை மாணவர்களுக்கு இடையேயான பண்ணிசைப் போட்டிகள் கோட்ட மட்டத்தில் நடைபெற உள்ளன.

ஐந்து பிரிவுகளாக இந்தப் போட்டிகள் நடைபெறும்.

இம்மாதம் 19ஆம் திகதி பளை, கொடிகாமம் ஆகிய கோட்டப் பாடசாலைகளுக்கான போட்டிகள் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும் -

25ஆம் திகதி சாவகச்சேரி கோட்டப் பாடசாலைகளுக்கான போட்டிகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் - நடைபெறவுள்ளன.

வலயமட்டப் போட்டிகள் ஏப்ரல் 6ஆம் திகதி மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் இடம்பெறும். (இ-10-133)

# பெண்ணை வழிமறித்த சிலர் கடித்துக் காயப்படுத்தினர்

## நெல்லியடியில் சம்பவம்

நெல்லியடி,மார்ச்7

நெல்லியடிச் சந்தையில் வியாபாரம் முடிந்து வீட்டுக்குச் சென்ற இளம்பெண் ஒருவரை பதுங்கியிருந்த சிலர் வழிமறித்து வாயால் கடித்துக் காயப்படுத்தியதாகக் கூறப்படுகிறது. இச்சம்பவம் தொடர்பாக, நெல்லியடிப் பொலீஸார் நேற்றுக்காலை ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30மணியளவில் நெல்லியடி கிழக்கு புதுக்கிணற்றடி என்ற இடத்தில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த இளம் பெண்ணான ந.தனலக்சுமி (வயது38) என்பவரே, கன்னங்கள், நெற்றி, தொடைப் பகுதி, இடதுகால் போன்ற இடங்களில் கடிகாயங்களுக்கு இலக்கானார்.

மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த இப்பெண் இரு நாள்களின் பின் வீடு திரும்பியுள்ளார்.

இது சம்பந்தமான விசாரணைகளை மேற்கொண்ட நெல்லியடிப் பொலீஸார், வதிரியைச் சேர்ந்த வி.பாஸ்கரன் (வயது 38) என்பவரை நேற்றுக்காலை கைது செய்து, பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்தசமயம், இவரை இருவாரகாலம் விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் பொ. குமாரசாமி உத்தரவிட்டார்.

இச் சம்பவத்தில் ஈடுபட்ட மேலும் இருவரைக் கைது செய்ய நெல்லியடிப் பொலீஸார் வலை விரித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் பாலியல் வல்லுறவு முயற்சி என்று தற்போது கூறப்படுகிறது. பாலியல் வல்லுறவுச் சம்பவம் இது என ஆரம்பத்தில் கதை அடிபட்டது.

# மகளிர் தின நிகழ்வுகள்

யாழ். மாநகராட்சி மன்றத்தின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் சர்வதேச மகளிர்தின நிகழ்வுகள் நாளை காலை 9மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வில் வரவேற்பு நடனம் உட்பட பட்டிமன்றம், குழுநடனம், கரகம், நாடகம், மகளிர் தின உரைச் சித்திரம் என்பனவும் இடம்பெறும். (இ-10)

* * *

யாழ். பல்கலைக்கழகத்தில் நாளை பிற்பகல் 2 மணி முதல் மகளிர் தின நிகழ்ச்சி கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். 'புத்தாயிரமாம் ஆண்டில் பெண்கள்' என்ற கருப்பொருளில் கருத்தரங்கம் இடம்பெறும். ஆற்றுகை நிகழ்ச்சியும் இடம்பெறும். (ஐ)

* * *

அரியாலை வடமேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் சர்வதேச மகளிர் தின விழா நாளை புதன்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு அரியாலை மேற்கு காந்தி சனசமூக நிலைய முன்றலில் சங்கத் தலைவர் திருமதி எஸ். லோகநாதன் தலைமையில் நடைபெறும். இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணக் கல்விவலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மீரா அருள்நேசன் கலந்துகொள்வார்.

விழாவில் பாடசாலை மாணவிகள் மற்றும் மகளிர் அமைப்புகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (க-15)

## பாடசாலைகளில்

யாழ்ப்பாணம்,மார்ச்7

சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி நாளை சகல பாடசாலைகளிலும் விசேட நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

காலை 8 மணி தொடக்கம் 9 மணிவரை 'இலங்கையில் சமாதானம்' என்ற கருப்பொருளில் மகளிர்தின நிகழ்ச்சிகளை நடத்தி தமக்கு அது தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் சகல பாடசாலை அதிபர்களையும் கேட்டிருக்கிறார். (ஐ)




# இந்தியா இன்னிங்ஸ் தோல்வி! அஸார் 22ஆவது சதம்!

பெஸாவர்,மார்ச்7

இந்திய - தென்ஆபிரிக்க அணிகளுக்கு இடையில் பெங்களூரில் நடைபெற்ற இரண்டாவது ரெஸ்ற் போட்டியில் தென்ஆபிரிக்க அணி இன்னிங்ஸாலும் 71 ஓட்டங்களாலும் இந்திய அணியைத் தோற்கடித்ததன் மூலம் 2-0 என்ற அடிப்படையில் தொடரை வென்றது.

நேற்றைய இறுதிநாள் ஆட்டத்தில், 5 விக்கெட்டுக்களை இழந்து 196 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணி 250 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. முஹமட் அஸாருதீன் 107 ஓட்டங்களைப் பெற்று, ரெஸ்ற் போட்டிகளில் தனது 22ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தார்.

ஓட்ட விவரம்:-

இந்திய அணி:- 158 மற்றும் 250

தென்ஆபிரிக்க அணி:- 479

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்7

யாழ். மாவட்ட கல்வி வலயங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று காலை 8.30 மணிக்கு துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் அரை இறுதி ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★ 16 வயதுப்பிரிவு - டிறிபேக் கல்லூரி எதிர் யாழ். இந்து.

★ 18 வயதுப்பிரிவு - தேவரையாளி இந்து எதிர் வேலணை துரைச்சாமி ம.ம.வி. (உ-8-4)

## கிரிக்கெட்

யாழ்ப்பாணம்,மார்ச்7

'மணிவதனன்' ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றுவரும் 9 பேர் பங்கு பற்றும் 15 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் வை.எம்.ஸி.ஏ. வி.க. அணியை எதிர்த்து ஜி.பி.எஸ். வி.க. அணி மோதும். (உ-8-4)

# இலங்கை - பாக். மோதல்

பெஸாவர்,மார்ச்7

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் பெஸாவரில் நடைபெறும் இரண்டாவது ரெஸ்ற் ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்று ஆட்ட நேர இறுதியில் பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்ஸில் ஒரு விக்கெட்டை இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

முன்னதாக இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸில் 268 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. மாவன் அத்தபத்து 75, அணியின் உபதலைவர் மஹில ஜெயவர்த்தன 36, அரவிந்த டி சில்வா 33 ஓட்டங்களைப் பெற்றனர். அதிவேகப் பந்து வீச்சாளர் சொய்ப் அக்தர் 5 விக்கெட்டுக்களையும், அப்துல் ரஸாக், அமீர் சொஹைல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்ஸில் நேற்று ஆட்ட நேர இறுதியில் ஒரு விக்கெட்டை இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அமீர் சொஹைல் 22 ஓட்டங்களையும், அணித்தலைவர் சயீட் அன்வர் ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களையும், யுஹானா ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களையும் பெற்றனர். மஹில ஜெயவர்த்தன ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

மூன்றாவது நாள் ஆட்டம் இன்று தொடரும். (ஐ-8)

# வலைப்பந்தாட்டம்

யாழ். கல்வி வலயத்தில் கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கு இடையேயான வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆடுகளத்தில் ஆரம்பமாகி நடைபெறும். இன்றைய ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

### 15வயதுப்பிரிவு

★ இடைக்காடு ம.வி. எதிர் புத்தகலட்டி விஷ்ணு வித்தி.

★ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி எதிர் புத்தூர் சோமஸ்கந்தா.

### 17 வயதுப்பிரிவு

★ இடைக்காடு ம.வி. எதிர். கோப்பாய் ம.வி.

★ புத்தகலட்டி விஷ்ணு வித்தி. எதிர் புத்தூர் சோமஸ்கந்தா.

### 19 வயதுப்பிரிவு

★ இடைக்காடு ம.வி. எதிர் அத்தியார் இந்து.

★ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி எதிர் புத்தூர் சோமஸ்கந்தா (உ-8-4)

* * *

யாழ்.கோட்ட மட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையில் இன்று பிற்பகல் 2 மணிக்கு கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய ஆடுகளத்தில் இடம்பெறும் வலைப்பந்தாட்டப் போட்டிகளில் 15 வயதுப்பிரிவில் வேம்படி மகளிர் கல்லூரி அணி புனிதஜேம்ஸ் ம.வி. அணியுடனும் 17 வயதுப் பிரிவில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணி புனித ஜேம்ஸ் ம.வி. அணியுடனும், வேம்படி மகளிர் கல்லூரி அணி கன்னியர்மடம் ம.வி. அணியுடனும், 19 வயதுப் பிரிவில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணி புனித ஜேம்ஸ் ம.வி. அணியுடனும் மோதுகின்றன. (உ-8)

### கைதிகளை விடுவிக்க அரசு நடவடிக்கை எடுக்காவிடில்

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு சமாதான யாத்திரை செல்வோம்

## படையினர் சங்கத் தலைவர் நாணயக்கார எச்சரிக்கை

கொழும்பு,மார்ச்7

விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள யுத்தக் கைதிகளை விடுவிக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் காணாமல் போன படையினரின் உறவினர்கள் சுமார் 5000 பேர் விடுதலைப் புலிகளின் பிரதேசத்துக்குச் சமாதான யாத்திரை மேற்கொள்ள உள்ளனர் என்று காணாமற்போன படையினர் சங்கத் தலைவர் ஈ.பி. நாணயக்கார தெரிவித்தார். யுத்தக் கைதிகள் விடயத்தில் அரசு இருவாரங்களில் தீர்வு காண முன்வரவேண்டும். அன்றேல் எமது போராட்டம் வெடிக்கும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

கொழும்பிலிருந்து ஆரம்பமாகும் எமது சமாதான யாத்திரை முதலில் வவுனியாவுக்குச் செல்லும். அதன் பின்னர் யுத்தக்கைதிகள் வைக்கப்பட்டிருக்கும் புதுக்குடியிருப்புக்கு சமாதான யாத்திரையை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். இதற்கு அனுமதி கோரி விடுதலைப் புலிகளுக்குக் கடிதம் அனுப்பியுள்ளோம். என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

# வன்னி தபால் பொதிகள் வவுனியாவில் தேக்கம்

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கான 350 தபாற் பொதிகள் அங்கு அனுப்பி வைக்கப்படாத நிலையில் வவுனியா தபாலகத்தில் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக நாள்தோறும் 100 தபாற் பொதிகள் மட்டுமே வன்னிக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

இதனால் நாள் தோறும் வந்து சேரும் தபாற்பொதிகளை உடனடியாக வன்னிக்கு அனுப்பி வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனாலேயே தற்போது 350 தபாற் பொதிகள் தேங்கியுள்ளன. (ஐ-7)

### யுத்த நிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்கிரமசிங்க, கட்சிச்செயலாளர் காமினி அத்துக்கோறள, தவிசாளர் கரு ஜெயசூரிய, மூத்த உறுப்பினர்கள் றொனி டி மெல், கே.என்.சொக்ஸி, இராஜமனோகரி புலேந்திரன் ஆகியோர் இடம்பெறுவர் என ஐ.தே.கட்சி அறிவித்துள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக 1997இல் தமது கட்சி சமர்ப்பித்த மாற்று யோசனைகளையே மீண்டும் வலியுறுத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாக ஐ.தே.கட்சிப் பிரமுகர் ஒருவர் சொன்னார்.

ஜனாதிபதியைச் சந்திக்கும் போது முதலில் பேச்சுகள் தொடர்பான நிகழ்ச்சி நிரல் அல்லது நேர அட்டவணை ஒன்று தயாரிக்கப்படும் என்றும் -

அதன் பின்பே ஏனைய பேச்சுகள் நடைபெறும் என்றும் -

கட்சிப் பிரமுகர் மேலும் சொன்னார்.

"தீர்வுக்கான முயற்சிகள் பற்றிய படிமுறை ஒன்றை எமது கட்சி தயாரித்துள்ளது. அதை முன்வைத்து வலியுறுத்துவோம்.

"அதன்படி முதலில் போர் நிறுத்தம் செய்யப்படவேண்டும். தொடர்ந்து கட்டுப்பாடின்றி வன்னிக்கான உணவு விநியோகம் மேற்கொள்ளப்பட வேண்டும். யாழ்ப்பாணத்தில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் நீக்கப்படவேண்டும்.

"இந்த ஏற்பாடுகள் இருதரப்புக்கும் இடையில் பேச்சுக்கான உகந்த சூழ்நிலையை உருவாக்குபவையாக இருக்க வேண்டும்.

"அதற்குப் பின்னர் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் இடைக்கால நிர்வாகத்துக்கு என ஓர் அமைப்பு ஏற்படுத்தப்படுவதுடன், பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து புலிகள் உட்பட சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவரும் ஒன்றாகப் பேச வேண்டும். இதற்கு நோர்வே மத்தியஸ்தம் பயன்படுத்தப்படலாம்" -

இப்படி ஐ.தே.கட்சியின் மற்றொரு மூத்த தலைவர் தகவல் வெளியிட்டார்.

(உ)

### வவுணதீவு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் வலையிறவுப் பாலத்தின் ஊடான போக்குவரத்து சில மணிநேரம் தடைப்பட்டது.

வவுணதீவு முகாமின் மேற்குப் பகுதியில் இருந்தே புலிகள் ஷெல் தாக்குதலை மேற்கொண்டதாக மட்டக்களப்பு இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

புலிகளின் ஷெல்தாக்குதலை அடுத்து வவுணதீவு இராணுவ முகாமில் இருந்தும், விமானப் படைத் தளத்தில் இருந்தும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி பதிலுக்குப் படையினரும் சரமாரியான ஷெல்தாக்குதல்களை நடத்தினர்.

1997ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6ஆம் திகதி விடுதலைப் புலிகள் வவுணதீவு இராணுவ முகாமைத் தாக்கி அழித்தனர். அதன் மூன்றாவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டே புலிகள் நேற்றைய தினம் ஷெல் தாக்குதலை நடத்தியதாக வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டது. (ஐ-7-21)

### கைதுசெய்வதற்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தார். அடுத்தநாள் காலையே தமது வழமையான பணிக்காக அவர் மன்னாருக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

இதனால் கைதுசெய்வதற்கான உத்தரவுப் படிவம் யாழ். நீதிமன்றப் பதிவாளரினால் தயாரிக்கப்பட்ட போதும் அதில் நீதிவானின் ஒப்பம் பெறப்படவில்லை. ஒப்பத்தைப் பெறுவதற்காக சம்பந்தப்பட்ட படிவத்தை யாழ்.நீதிமன்றம் தபாலில் மன்னார் நீதிமன்றத்தில் பணிபுரியும் நீதிவான் எம்.இளஞ்செழியனுக்கு அனுப்பி வைத்த போதும் நேற்று வரை அது அவரது கைக்குக் கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இதனால் யாழ்.நீதிமன்றத்தில் கோவையில் வைக்கப்பட்டிருந்த இந்த உத்தரவின் பிரதி ஒன்றினை யாழ். நீதிமன்றப் பதிவாளரிடமிருந்து பக்ஸ் மூலம் மன்னாருக்குப் பெற்றுக்கொண்ட நீதிவான் இளஞ்செழியன் கையெழுத்திட்டு அதனை குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு உடனடியாக அனுப்பிவைத்தார்.

மேற்படி ஏழு படையினரையும் கைது செய்வதற்கான நீதி மன்ற உத்தரவு தமக்குக் கிடைக்கவில்லை என்று குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளதை அடுத்தே நேற்று பக்ஸ் மூலம் அவர்களுக்கு அது அனுப்பிவைக்கப்பட்டது. (உ-5)

### காணாமற்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டத்தை நடத்துவதான முடிவு நேற்று நடைபெற்ற சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டதாக பாதுகாவலர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

மறியற் போராட்டத்தில் கலந்துகொள்வதற்காக சங்க உறுப்பினர்கள் அனைவரையும் அன்று காலை எட்டு மணிக்கு யாழ்.செயலகம் முன்பாகக் கூடுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சங்கம் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

புலிகளின் காவலில் இருந்த படையினரை பார்வையிடுவதற்காக அவர்களது உறவினர்கள் வன்னி செல்வதற்கு ஏற்பாடு செய்த அரசு கைதாகிக் காணாமற்போய் மூன்றரை வருடங்கள் கழிந்த நிலையிலும் எங்கள் பிள்ளைகள் என்னவானார்கள் என்பது குறித்த பதிலைப் பெற்றோருக்கும் மனைவிமாருக்கும் இன்னமும் தெரிவிக்காமல் உள்ளது. எமது பிள்ளைகளைக் காண வழிவகை செய்து தருமாறு யாழ். அரச அதிபர் ஊடாக அரசாங்கத்தைக் கோரவுள்ளோம் - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நாளைய மறியற் போராட்டத்தின் முடிவில் ஜனாதிபதிக்கு மகஜர் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

# பாதுகாப்புத்துறையினருக்கு 500 ரூபா சம்பள உயர்வு

கொழும்பு,மார்ச்7

பாதுகாப்புத்துறை உத்தியோகத்தர்கள் மற்றும் பாதுகாப்பு ஆலோசகர்களின் அடிப்படைச் சம்பளம் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் 500 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது.

தொழில் அமைச்சர் டபிள்யூ டி. ஏ.செனிவிரட்ணவின் தீர்மானத்தை அடுத்து இந்தச் சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது.

அத்துடன் வருடத்தில் இவர்களுக்கு மேலும் 6 தினங்கள் சம்பளத்துடன் கூடிய விடுமுறைத் தினங்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரதினம், தைப்பொங்கல், தமிழ், சிங்களப் புத்தாண்டு தினம் மற்றும் கிறிஸ்மஸ், ஹஜ்பெருநாள் என்பன இந்த விடுமுறைத் தினங்களாகும். (ஐ-7)

### ஈழத்தமிழருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் எந்தத் தவறும் இல்லை. துணிச்சல் மிக்க இளைஞர் பட்டாளம் எனது இயக்கத்தில் உள்ளது. நான் நினைத்தால் அவர்களுக்கு மின்சார முறுக்கேற்றி பத்து நிமிடத்தில் போர்க் களத்துக்கே அழைத்துச் சென்றுவிட முடியும்.

ஆனால் எனக்கும் எனது கட்சிக்கும் வன்முறைகளில் நம்பிக்கை இல்லை. ஆகையால் நான் இப்படியான நடவடிக்கைகளில் இறங்கவில்லை - இவ்வாறு வை.கோ. மேலும் தெரிவித்தார். (ஐ-8)

### சித்திரவதை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகரசபை மைதான குண்டு வெடிப்புத் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று நீதிபதி சி.வி. குணதிலக முன்னிலையில் அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

சந்தேக நபரின் வாக்குமூலத்தைக் கேட்ட நீதிவான் சந்தேக நபரிடமிருந்து குற்றஒப்புதல் வாக்குமூலத்தைப் பெற்றுக் கொள்ளமுடியாது எனத் தெரிவித்து வழக்கை இம்மாதம் 10ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (ஐ-7)

### முறையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களை அடையாளம் காண அணிவகுப்பு ஏதும் நடத்தப்படவில்லை. இத்தகைய படுகொலைகள் - தமிழர்களுக்கு எதிராக - நடத்தப்படுவதை அனுமதிக்க முடியாது" - என்று தமிழர் விடுதலைக்கூட்டணி உறுப்பினர்கள் சார்பில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது.

குழுவின் அடுத்த கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறும் போது சாரதாம்பாள் கொலைச் சம்பவம் தொடர்பான பிரேத பரிசோதனை அறிக்கை, மரண விசாரணை அறிக்கை ஆகியவற்றை சமர்ப்பிக்கும்படி புலன் விசாரணையாளர்களை குழு கேட்டுக் கொண்டது. (உ)

### மீசாலையில் தேடுதல்

தென்மராட்சி,மார்ச்7

மீசாலை மடத்தடி, அல்லாரை ஆகிய பகுதிகள் நேற்றுக் காலை சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. (ஐ-117)

### மட்டு.அம்பாறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில தினங்களுக்கு நீடிக்கலாம் என காலநிலை அவதான நிலைய அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்த வருடத் தில் இதுவரை 719.5 மில்லிமீற்றர் மழை பதிவாயிருக்கிறது. ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் இவ்வாறு பெருமளவு மழை பெய்ததால் பெரும்போக நெல் அறுவடையும், காலபோக விதைப்பு வேலைகளும் பாதிக்கப்பட்டிருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். பெரும்போக நெல் அறுவடை செய்யமுடியாத நிலையில் வயல்களில் மழை வெள்ளம் நிறைந்திருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (ஐ-21)

### வடக்கு மகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு ஜனாதிபதி தீர்மானித்திருப்பதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது பொதுநிர்வாக அமைச்சின் இரண்டாவது செயலாளராக இருக்கும் பந்துசேன இந்த அமைச்சின் செயலாளராக நியமிக்கப்படக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கப்பல், மாணிக்கக் கற்கள் வர்த்தகம் ஆகிய துறைகள் நந்தா மத்தியூவிடம் வழங்கப்படும் என்று கூறப்படுகின்றது.

ஐ.தே.கட்சியின் எம்.பிக்களான சரத் அமுனுகமவும், நந்தா மத்தியூவும் அரசுத் தரப்புக்கு சார்பாக இயங்கி வருவது தெரிந்ததே. அமைச்சர் பதவி குறித்தொதுக்கப்படாத அமைச்சராக சரத் அமுனுகம தற்போது பதவி வகித்து வருகின்றார். (உ)


## கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டி – 2000

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தால் வருடா வருடம் நடத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட (30) ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கு யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்ப முடிவு திகதி – 14-03-2000
2. அணி ஒழுங்குத் தெரிவு -- 15-03-2000 பி.ப 4மணி
3. விண்ணப்பக் கட்டணம் – ரூபா 300.00

குறிப்பு:
எம்மால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து விண்ணப்ப முடிவு திகதிக்கு முன் விண்ணப்பிக்கும் கழகங்கள் மட்டுமே அனுமதிக்கப்படும்.

(74237) - செயலாளர்.

## இதோ வெளிவந்துவிட்டது!

தரம் 10

**கணிதப் பயிற்சி**

*(முழுப் பாடத்திட்டத்தையும் அடக்கியது)*

ஆக்கம் : பா. கிருபாகரன்
[S.p. Trd Maths.B.A (Cey)]

கிடைக்குமிடங்கள்:

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
யாழ்ப்பாணம்

***சிவநெறி கல்வி நிலையம்***
ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகில்

(11325)


## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற நிர்வாக உறுப்பினரும் 2ஆம் வருட மாணவனுமாகிய

**செல்வன் ப.தர்மகுமரன்** அவர்களுடைய
அன்புத் தந்தையார்

**வைத்திலிங்கம் பழனித்துரை**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

***உடற்கல்வி மாணவர் மன்றம்,***
***யாழ். பல்கலைக்கழகம்.***

(74254)

## மரண அறிவித்தல்

### இரத்தினம் சிறீகாந்தன் (சிறீ)

(I.P.T. Telecom)

இரத்தினம் சிறீகாந்தன் அவர்கள் நேற்று (06.03.2000) திங்கட்கிழமை மட்டக்களப்பில் காலமானார்.

அன்னார் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற செல்லையா இரத்தினம் மற்றும் திருமதி பூபதி இரத்தினம் ஆகியோரின் அன்பு மகனும் திருமதி சிவமலர் சிறீகாந்தன் (ஆசிரியை யாழ்.சென்றோக்ஸ் வித்தியாலயம்) அவர்களின் அன்புக்கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கூழாவடி லேன்,
சங்கரப்பிள்ளை றோட்,
ஆனைக்கோட்டை.

தகவல்:
சிவமலர் (கௌரி)
(மனைவி)

(74262)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07-03-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.